


# தென்மொழி


## உள்ளே...


தமிழில் வழிபடுவது அடிப்படை உரிமை

கைவிடப்பட்ட திருவள்ளுவர்

வட்டாட்டமும் சீம்பும்

புதிய சனநாயகத்திற்கு ஒரு விளக்கம்

எழுக தமிழினமே எழுக - பாடல்

தென்மொழி அவையக் கருத்தரங்கம்

மக்களவை

செய்திகள்


## புதுமைக் கனவுகள் !

அடக்கி ஒடுக்கிடப் பட்டநந் தமிழினம்
ஆட்சி அமைத்திடுமா- இனி
மீட்சி கிடைத்திடுமா- முன்
முடக்கிக் கிடந்திடும் வாழ்வின் உரிமைகள்
மீண்டும் முளைத்திடுமா-இனி
மேலுங் கிளைத்திடுமா?

தொடக்கப் பெருமைகள் சீர்மைகள் வந்துநம்
தொன்மை சிறந்திடுமா- உள
வன்மை பிறந்திடுமா- பெருந்
தடக்குன்றத் தோள்கள் எழுந்துநின்றே நம்மின்
தாழ்ச்சி விலக்கிடுமா - பகை
சூழ்ச்சி துலக்கிடுமா?

ஒடுங்கிக் கிடந்திடும் செந்தமிழ்த் தாயினம்
ஒற்றுமை யுற்றிடுமா -தனி
ஊராண்மை பெற்றிடுமா - உயிர்
நடுங்கிக் குலைந்திடும் வாழ்க்கை நலன்களும்
நன்கு வளர்ந்திடுமா- புகழ்
நாடிக் கிளர்ந்திடுமா?

ஓங்கிப் பெருகிடும் மேன்மைச் சிறப்புகள்
உள்ளம் மலர்ந்திடுமா - மனக்
கள்ளம் உலர்ந்திடுமா?
தேங்கிக் குமிழ்த்திடும் அறிவுமுன் னேற்றங்கள்
தேவை நிறைத்திடுமா- இனத்
தீமை மறைத்திடுமா?

- பாவலரேறு

(26.5.81 செவ்வாய்-கோவைச்சிறை


தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி : 29

ஓலை : 7

விலை உரு. 4.00

தி.பி. 2028 கடகம் - 1997 சூலை



# சாதித் தீமைகள்

ஒரு தீமையை, அதுவும் நெடுங்காலமாக நம் உள்ளத்திலும், உணர்விலும், ஏன் உடலிலும்கூட, பற்றுப் படையாகவும், ஒட்டுண்ணியாகவும், படர்ந்து, நம்மை அதுவும் அதனை நாமும் விடுதலியலா விருப்பத்துடனும், விட்டு விலகா மனத்துடனும் தொடர்பு கொண்டுள்ள சாதிச் சுவையை அல்லது மயக்கத்தை அல்லது செருக்கை ஒழிக்க வேண்டும் என்றால் சில நலன்களைக் கூட, சலுகைகளையும் சேர்த்தே குறிப்பிடலாம், நாம் இழந்தே ஆகல் வேண்டும். அடிமைச் சுவை நலன்களைப்போல் சாதிச்சுவை நலனும் மானமிழப்பை உணரச் செய்யாமல் உள்ள மனம் மரத்துப்போன உணர்வுடையதே! எனவே நெடுநாள் பழக்கத்தை விட்டு விலகும் மன ஆற்றாமை அதிலும் உண்டு. ஆனாலும், அறிவும் உணர்வும் வளரப்பெற்றவர்களாக தாமே அச்சாதிப் பிடிப்பினின்று விலகும் நல்லுணர்வாளர்களைத் தவிர. மற்ற அல்லுணர்வாளர்களை அரசு கழுத்தைப் பிடித்தேனும் நெட்டித் தள்ளிக்கொண்டு போய்ச சாதிக் கேட்டுக்கு வெளியே கொணர்ந்து நிறுத்தத்தான் வேண்டும். இஃது ஒரு பனிமலை பெயர்ப்பு முயற்சிதான். ஆனாலும் அணுவாற்றல் மிகுந்த இவ்வூழியுள் அதனை எவ்வாறேனும் செய்தே யாகல் வேண்டும்!

சாதியொழிப்புக்கு இதுவரை ஏற்பட்ட அறநூலாக்கங்கள் குமுகாய மேம்பாட்டு விழிப்புரைகள், வேண்டுகோள்கள், விளம்பரப் பரப்பல்கள் என்னும் பலவற்றைவிட அதற்காகச் செய்யப்பெற்ற முயற்சிகள் மிகமிகக் குறைவே. அதுவும் சாதி ஒழியாததற்கு ஒரு பெருங் காரணமாகும். சாதியுணர்வுக்கு ஆளான ஒரு கோடிப் பேரில் ஒரு பத்தாயிரம் பேரே சாதியொழிப்புணர்வு கொண்டுள்ளனர்; அப் பத்தாயிரத்துள் ஓர் ஆயிரம் பேரே சாதியொழிப்பு பற்றிப் பேசுகின்றனர்; அவ்வா யிரத்துள் பத்துப் பேரே ஏதேனும் முயற்சி செய்கின்றனர்; அவர்களுள்ளும் ஓரிருவரே சாதியுணர்வை ஒழித்துப் புது மாந்த இனத்துள் தங்களையும் உறுப்பினர்களாக்கிக் கொள்கின்றனர். எனவேதான் சாதியுணர்வு நகர்த்தவியலாத சண்டிமாடு போல் நம் முன்னேற்றப் பாதையுள் ஆழக் குழிபறித்துக்கொண்டு படுத்துக் கிடக்கின்றது.

இனி, சாதியுணர்வும் பொருளியல் பின் தங்குதலும் ஒன்றையொன்று இணைத்துப் பிணைத்துக் கைகட்டிக் கொண்டு ஒத்து நடையிடுவதால் இரண்டில் ஒன்றைப் பிரித்து, ஒன்றுக்கு விடுதலையளிப்பது இயலாத ஒரு பெரும்பாடாக விருக்கின்றது. இந்நிலையில் அவற்றுக்காகத் தனித்தனி முயற்சி செய்பவர்களிடம் ஒரு சோர்வையே உண்டாக்குகின்றது. எனவே ஒன்றினால் மற்றொன்று தடைப்படாத ஒரு வகைத் திட்டத்தையே நாம் தெரிவுசெய்து செயல்படுத்த வேண்டி உள்ளது.

-பாவலரேறு

(நூல்: சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும்)



“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்



**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

**தென்மொழி**

மொழி—இனம்—நாடு

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி 29 ) திபி. உ0உஅ - கடகம் (சூலை - '97) (ஓலை -7

# தமிழில் வழிபடுவது அடிப்படை உரிமை!

தமிழ்நாட்டின் திருக்கோயில்கள் அனைத்திலும் இனித் தமிழில் தான் வழிபாடு நடைபெறும்; விரும்பிக்கேட்பார்க்கு மட்டும் சமற்கிருதத்தில் வழிபாடு செய்யப்படும் என்று, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகனார் கூறியிருப்பதோடு, மீறிச் சமற்கிருதத்தில் மட்டுமே வழிபாடு செய்வோர்மீது நடவடிக்கை யெடுக்கப்படும் என்றும் தமிழில் வழிபாடு செய்ய யாராவது மறுத்தால் அது பற்றித் தம்மிடம் நேரடியாகவே முறையிடலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். அமைச்சரின் திட்டவட்டமான இவ்வறிவிப்பு முழுமனத்தோடு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ், ஆரியத்தால் பிணிக்கப்பட்டுச் சமயத் துறையில் ஆணியறையப்பட்டிருக்கிறது. அற்றை வழிபாட்டுக் கூடங்களில் அண்டி, பல்வேறு உத்திகளால் அரண்மனைகளில் சாய்காலை வளர்த்துக்கொண்டவர்களான வந்தேறிகள், தம் வெளிர் நிறத்தாலும் வேதப் வெடிப்பொலியாலும் தாம் நிலத்தேவர் (பூசுரர்) என்றும், சமற்கிருதம் தேவமொழி(தேவபாஷை) என்றும், தமிழ் இழிமொழி (நீசபாஷை) என்றும் இடையறாது பரப்பிவந்த வலக்காரத்தால் தமிழ், மக்களால் புறக்கணிக்கப்படும் நிலை ஏற்பட்டது.

தமிழ்மக்களின் உழைப்பாலும் தமிழ் அரசர்களின் கொடையாலும் எழுப்பப்பட்டு, தமிழர்தம் அருங்கலை நேர்த்திக்கும் கட்டட அமைப்புத் திறத்திற்கும் சான்றாக நிற்பவையும், பழந்தமிழ் முனிவர்கள்தம் மெய்ப்பொருட்கோட்பாடுகளின் அடிப்படையில் வகுக்கப்பட்டனவும் திருமுறைகள் முதலானவற்றால் 'பாடல்பெற்றவை' என்று சிறப்பிக்கப் படுவனவும்பிறவுமானதிருக்கோயில்களில்வழிபாட்டு மொழியா காதெனத் தமிழ் வெளியேற்றப்பட்டது.

தமிழர்களின் கொடைமடத்தால் சதுர்வேதி மங்கலங்களையும் பிரமதேயங்களையும் பெருக்கிக்கொண்டதோடு மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளிலும் தலையிட்டுத் தம்மை மேனிலையில் நிறுத்திக்கொண்ட ஆரிய மறையவர்கள், மக்களைத் திசைதிரும்ப விடவில்லை. ஆரிய பார்ப்பனர்களுக்கு மட்டுமேயுரிய வேதக்கல்வியே கல்வியாய் அரசர்களால் வளர்க்கப்பட்டது. நூற்றாண்டுகள் பல கழிந்தன.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மாபெரும் தமிழ்மீட்பர் மறைமலையடிகளார் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சிக்குப் பின், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் தமிழறிஞர்கள் சிலர் தமிழ்வழிபாட்டைக் கொள்கை அளவில் ஏற்றாலும், அது செயலுக்கு வரும்நிலை ஏற்படவில்லை.

தமிழின் மேன்மையையும் திருமுறைகள் முதலியவற்றின் தெய்வப் பான்மையையும் எத்துணை எடுத்துரைத்தாலும், திருவிளையாடல்கள், தொன்ம (புராண)க் கதைகளெல்லாம் சுவைபடச் சொல்லப்பட்டாலும் தமிழ் வழிபாட்டுக்கு மக்கள் செவிசாய்க்கவில்லை.

ஒரு திருமடத்தின் தலைவரான தவத்திரு. குன்றக்குடியடிகளார் தொடர்ந்து மேற்கொண்ட பெருமுயற்சியால் பேராயக்கட்சி ஆட்சிக் காலத்தில் தமிழ்வழிபாடு தொடங்கப்பட்டாலும் அதைத் தொடரமுடியவில்லை தி.மு.கழக ஆட்சியில்பரவலாக நடைமுறைக்குக் கொணரப்பட்ட தமிழ்வழிபாடு நெருக்கடிநிலைக்குட்பட நேர்ந்தது. தமிழர்களான 'பொருட்செல்வர்'களேகூடத் தமிழ்வழிபாட்டு முயற்சிகளை எதிர்த்தனர். தமிழ்வழிபாடு கானல் நீரானது!

தில்லையம்பலத்தில் திருமுறை முழக்கத்தை ஆரியத்துக்குச் சமமாக மேலுயர்த்த முனைவர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் மேற்கொண்ட அறப்போர், மனநெகிழ்வுகொண்ட தமிழறிஞர்களின் பின்னடைவாலேயே தொய்வுற்று வெற்றியிலுந் தோல்வியாய் ஒருவாறு முடிந்தது!

இந் நிலையில் கடந்த பத்தாண்டுகளுக்கு முன் (1987) நம் பாவலரேறு ஐயா அவர்கள், தமிழ்வழிபாட்டுரிமையை மறுக்கும் வகையில் இடப்பட்ட தடையை விலக்கக்கோரி உச்சநெறி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். ஐயா அவர்களின் முறையீட்டின் மூலம் உச்சநெறி மன்றத்தில் முதன்முறையாகத் தமிழ் முழங்கியது!

தமிழன்,மொழியடிமையில் தொடங்கியே முற்றும் அடிமையானான். அம் மொழியடிமைக்கு வழி வகுத்தது மதமே. மதச்சாய்காலின் மூலமே வாழ்வியல் நிகழ்ச்சிகளிலும் தமிழ் விலக்கப்பட்டது. படிப்படியாக ஆரியத்தின் பிணிப்பு இறுகியது. ஆகவே, தமிழ் வழிபாட்டு மொழியானால்தான் ஆரியத்தின் வல்லாண்மை தளரும்!

தாய்மொழியில் வழிபடுவது ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படை உரிமை. அதனை நாம் எக் கரணியம் பற்றியும் விட்டுக்கொடுப்பதோ புறக்கணிப்பாக இருப்பதோ அறிவுடைமையாகாது. எனவே, தமிழ்நாட்டரசு கொணர்ந்துள்ள தமிழ்வழிபாடு வெற்றியுடன் தொடர எல்லா வகையிலும் துணைநிற்பது தமிழ்மக்கள் அனைவருக்கும் கட்டாயக் கடமையாகும்!

# கைவிடப்பட்ட திருவள்ளுவர்

**மா**வட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த சிறப்புப் பெயர்களெல்லாம், அப் பெயர்களுக்குரியவர்களின் பெருமைகளைப் புறந்தள்ளிச் சாதியடையாளங்களாகச் சிறுமைப் படுத்தப்பட்டும், சாதிச் சிக்கல்களைத் தோற்றுவிப்பனவாகவும், உயிர்ச் சேதங்களையும் பொருட்சேதங்களையும் விளைவிப்பனவாகவும் இழிவுபடுத்தப்பட்டும் பெருமாபாலானோரின் வெறுப்புக்கு இடனாகிவிட்ட நிலையில், அப் பெயர்கள் அனைத்தும் நீக்கப்பட்டு அவற்றுக்கு இயல்பான மாற்றுப் பெயர்கள் சூட்டப்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டரசின் முனைப்பான இந் நடவடிக்கையை நாம் வரவேற்கிறோம். வரவேற்றாலும், நம் தமிழ்மக்களுக்குப் பெருமையையும் பெருமிதத்தையும் ஊட்டும் திருவள்ளுவர் திருப்பெயரும், மூவேந்தர்தம் குடிப்பெயர்களும், வள்ளலார், பெரியார் முதலானோர் பெயர்களுமான நற்றமிழ்ப் பெயர்களெல்லாம் மக்களிடையே எளிதாகப் புழங்கிக்கொண்டிருந்த நிலைமை மாறிவிட்டது பற்றி நமக்கு உள்ளூர வருத்தம் இல்லாமலில்லை! அன்றியும் பாரதிய சனதாவினரும்,சோவும்,

பஞ்சாபில் சுற்றுச்செலவு மேற்கொண்டிருக்கும் காஞ்சி சங்கராச்சாரியாரும் இதனை வரவேற்றிருப்பது நம் மனத்தை நெருடுகின்றது.

சாதி அமைப்புகளை (சங்கங்களை) ஒழிக்க வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை யென்றாலும், அதைச் சங்கராச்சாரியார் கூறுவதால் அதன் நன்மையிலேயேகூட நமக்கு ஐயுறவு தோன்றுகின்றது. ஊரகங்களில் நாட்டாண்மை-தலையாரி வழக்கத்தைக் கொண்டுவர வேண்டும் என்னும் சங்கராச்சாரியாரின் கூற்று, இருபதாம் நூற்றாண்டின் விளிம்பிலுங்கூட, நாட்டுமக்களை அவர் எத் திசையில் திருப்பப் பார்க்கிறார் என்பதையும் அவருடைய அவலாசை என்ன என்பதையும் புலப்படுத்துகின்றது.

இனி, இப் பெயர்மாற்றத்தால் சாதி மக்களுக்கு ஏற்படும் மனப்புண்ணுக்கு மருந்துபூசும் முறையிலேயே பல்கலைக்கழகங்கள் பலவற்றில் மேற்படி சிறப்புப் பெயர்கள் தாங்கிய அறக்கட்டளைகள் பல வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் படையாட்சியார், முத்தரையர், கோன், தேவன், தேவர் எனுஞ் சாதிப்பட்டங்களைத் தவிர்த்துச் சற்றுக் காரமருந்தாகவே பூசியிருக்கலாம். அப் பெயர்களின் சாதிப் பட்ட இழப்பு, வேறு சிறப்பு ஒட்டுச் சொற்களால் ஈடுசெய்ய இயலாத தன்று.

இனி, மாவட்டம் ஒன்றின் பெயராகவும், அரசுப் போக்குவரத்தின் பெயராகவும் இடம்பெற்றிருந்த திருவள்ளுவர் என்னும் பெயரும், போக்குவரத்துக் கழகங்களின் சேரன், சோழன், பாண்டின் மற்றும் பல்லவன் என்னும் பெயர்களும் பல்கலைக் கழகங்களில் நிறுவப்பெறும் அறக்கட்டளைகளுக்கான பட்டியலில் இடம் பெறாதது அப் பெயர்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு வரப்போகிறவர்கள் யாருமில்லை என்ற கருத்தினாற் போலும்!

பேராயக்கட்சியின் ஆட்சிக் காலத்தில், சென்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களை யடுத்து, மதுரையில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ முற்பட்ட போது, அதற்குத் திருவள்ளுவர் பெயரைச் சூட்டவேண்டும் என்று முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் உள்ளிட்ட தமிழுணர்வாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்; தமிழ்நல, பொதுநல அமைப்புகள் கோரிக்கை வைத்தன. ஆனால், அற்றை முதலமைச்சர் பத்தவச்சலனார் அவ்வாறு பெயர்சூட்ட மறுத்து, அது மதுரைப் பல்கலைக் கழகம் என்றே அழைக்கப்படும் என்று கூறிவிட்டார். அடுத்து வந்த தி.மு.கழக ஆட்சிக் காலத்திலும் அது மதுரைப் பல்கலைக் கழகமாகவே நீடித்தது. ஆனால்,

பின்பு வந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் அது மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம் ஆகிவிட்டது!

இன்று, அரசுப் போக்குவரத்து, மாவட்டம் ஆகியவற்றினின்றும் நீக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டமையால், திருவள்ளுவர் பெயர் அரசு நிறுவனம் எதிலும் இடம்பெறவில்லை. அண்ணா, காமராசர், பாரதியார், பாரதிதாசன், மனோன்மணியம் சுந்தரனார் ஆகியோர் பெயர்களிலும், ம.கோ.இரா.(M.G.R.) அம்பேத்கர், அன்னை தெரசா, ஆகியோரின் பெயர்களிலும், புதுவையில் வங்கப் பாவலர் தாகூர் பெயரிலுங்கூடப் பல்கலைக் கழகங்கள் இருக்கும் போது, திருவள்ளுவர் பெயர் தாங்கிய பல்கலைக் கழகம் ஏதும் இல்லாதது பெரிதும் வருந்தத்தக்கது.

எனவே, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 'சென்னைத் திருவள்ளுவர் பல்கலைக் கழகம்' என்றும், தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 'மறைமலையடிகள் தமிழ்ப் பல்கலைக் கழகம்' என்றும் பெயர் சூட்ட வேண்டும். அல்லாக்கால் ஏனைப் பல்கலைக் கழகங்களின் பெயர்களில் இடம் பெற்றிருக்கும் சிறப்புப் பெயர்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும் என்பதைத் தமிழ் நாட்டரசுக்கு நமது கோரிக்கையாக வைக்கிறோம்!

-இறை

## சிங்கள இனவெறி அரசுக்கு எதிராகத் திருச்சி நடுவண் சிறையில் உண்ணா நோன்பு

சிங்கள இனவெறி அரசுக்கு எதிராகத் தமிழ் நாட்டில், கடந்த விடை 23 அன்று (6.6.97) முழு அடைப்பு நடத்துமாறு விடப்பட்டிருந்த வேண்டுகோளை யொட்டித் திருச்சி நடுவண் சிறைச்சாலையில் சிறையாளிகள் நூற்றைம்பது பேர் திரு. அ. பன்னீர்ச்செல்வம் (பா.ம.க.) அவர்கள் தலைமையில் உண்ணாநோன்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நிகழ்ச்சியைத் திரு. ஈரோடு இளங்கோ தொடங்கி வைத்தார். திருவாளர்கள் தமிழ் முகிலன்(தமிழ்நாடு இளைஞர் பேரவை); க.நாராயணன் (இ.பொ.க. (மா.இலெ) ) பன்னீர் (த.தே.பொ.க.) இகூடல் இரவி முதலானோர் போராட்டத்தை விளக்கிப் பேசினர். மாலையில் திரு. முத்துக்கருப்பன் போராட்டத்தை முடித்துவைத்தார். ஒடுக்குமுறைச் சட்ட (தடா)ச் சிறையாளி இராசனால் தனிமைச் சிறைப் பகுதியிலேயே இவ்வுண்ணா நோன்பு கடைப்பிடிக்கப்பட்டது.

# வட்டாட்டமும் சிம்பும்

**1. carom board: "Bille"** என்னும் பிரஞ்சு மொழிச் சொல்லுக்கு மரத்துண்டில் செய்யப்பெற்ற நீண்ட குச்சி என்று பொருள். நீளக்குச்சியை வைத்துக்கொண்டு ஆட்ட உருளைகளில்(Bill) ஒன்றை விசைப்புறத்தள்ளி அவ் விசைப்பின்வழிப் பிற உருளைகளின் மேல் தாக்குதலுறுத்தி அவற்றை அல்லது அதனைக் குழிப் பைகளில்(Pockets) விழப்பண்ணும் விளையாட்டுக்கு Pocket billiards" என்று பெயர் (French:) "Billard".

தலையினின்று தொங்குதலுறும் கூந்தலுக்குப் பிரஞ்சு மொழியில் ``queue"என்று பெயர். அந்த நீண்ட தோற்றத்தின் அடிப்படையில்தான்- அணியாக - வரிசையாக நிற்கும் நிலையைக் குறித்தவாறும் பொருள் வளர்ந்து விளர்ந்தது - "Queue" என்னும் பிரஞ்சு மொழிச் சொல்லினின்றே ஆங்கிலத்துள் "Cue" என்னுமொரு சொல்லும் பதிவுற்றது!

அந் நீட்சியின் அடிப்படையிலேயே - உருளைகளை (Balls) விசைப்புறத் தள்ளுவதற்குப் பயன்படும் நீளிய குச்சிக்கும் "Cue stick" என்றவாறு சொல் ஏற்பட்டது. அந்த Cue Stick கொண்டு தள்ளப்பெறும் உருளையாகிய பந்துக்கு "Cue Ball" என்பது பெயர்.

உருளைகளை விசைப்புறத் தள்ளியாடும் அவ் ஆட்டத்திற்குரிய ஆங்கிலச் சொல்லே "carom" என்பதாகும். அச்சொல் எந்த மொழியினின்று வந்தெய்தியது என்று இன்றும் ஆங்கிலர்க்குத் தெரிந்திலது!

உருளைகளை விசைப்புறத்தள்ளும் அவ் ஆட்டம் போன்றே- வட்டுக்காய்களை அடிப்புவட்டால் (Striker) கட்டக்களப் பலகையில் விசைப்புறுத்தி ஆடும் இவ் ஆட்டத்திற்கும் போன்மைநிலை கருதி வழங்கப்பெற்று வருகின்றது. நாம் நம் மொழி முறைமைக் கேற்பவும்- ஒப்பவும் (Carom Board) "வட்டுவிசைப்புப்பலகை" என்றோ "வட்டுவிசைப் பலகை" என்றோ வழங்கலாம். அவ் ஆட்டத்திற்கு "வட்டாட்டம்" என்றும் வழங்கலாம்.

சொல்லாய்வறிஞர் அருளியார்

*2.* **"Shampoo"** *சீய்த்தல் :* அப்படியும் இப்படியுமாகக் கிளறுதல்.(காண்க: "கோழி குப்பையைச் சீய்க்கிறது!") முடியை அப்பபடியும் இப்படியுமாகக் கிளறிவிட்டுப் படிவுறுத்தும் கருவி சீய்ப்பு>சீப்பு என்று ஆகியது! இச் சீப்பு மரத்துண்டில் செய்யப்பெற்றுத் தமிழரிடையே தொடர்ந்த பழக்கத்தில் தோய்ந்த பிறகு - இதனின் தோற்றம் போன்றே - பிரிவு பிரிவாகவும் அதே பொழுதில் ஒன்றிப்பாகவும் அமைந்திருக்கும் அமைப்புத் தொகுதிக்குச் (குலையின் பற்றைக்குச்) சீப்பு என்ற பெயரும் சேர்ந்தது. (காண்க: ஒரு சீப்பு வாழைப்பழம் வாங்கினான்) தலைமுடிகளுக்கிடையிலடைந்த அழுக்கைப் போக்குதற்கு - அல்லது அது வாய்த்த நெய்ப்பிசுபிசுப்பைப் போக்குதற்கு - அவற்றை அப்படியும் இப்படியுமாகக் கிளறும் வழக்கம் நாம் அறிந்ததே! அப்படிக் கிளறலுறத் தேய்த்து அழுக்கையகற்றவுதவும் பொடியை - ஒரு காய் வகையினின்று அரைத்துக் கொண்ட தமிழர் - அதனை- அதன் பயன்பாடு கருதிச் சீய்+அ+காய்>சீயக்காய் அதாவது சீய்ப்புக்கு - சீய்த்து அழுக்கெடுத்தற்கு உதவும் காய் என்னும் பொருட்பாடுறும் சொல்லை உருவாக்கிச் கொண்டனர். சீயக்காய்>சீகக்காய் என்றவாறு யகர ககரத் திரிபொடு வழக்கு வேய்ந்தது. இது இயல்பானதுதான்! (காண்க: "வாணியன்> வாணியன்பாடி") வாணியன்>வாணிகன்(சீகக்காய் என்பதைச் சீக்காய் என்பர்-ஊராளியர்!) "சீகக்காய்" என்பதைச் சிகைக்காய் என்றவாறு தவற்று வடிவில் வழக்குறுத்தி - பயன்படுத்தி அதனைச் (சிகை = அதாவது-மயிர்) என்னும் பொருட்பாட்டிலேயே வழங்குகின்றது என்றவாறு திரித்துச் சொல்லாடுவது - தமிழ இரண்டகர்களின் தவறுதலாகக் காட்டிக் கொடுப்பான்களின் வழக்கங்களில் ஒன்று! இது ஒருபுறங் கிடக்கட்டும்!...

இந்தியில் **"Champna"**( = அழுத்து (**Press**)) என்றவாறு ஒரு சொல் உண்டு, அச் சொல்லினின்று ("அழுத்தித் தேய்" என்னும் பொருளில் **"Champo"** என்றொரு சொல் வளர்ச்சியடைந்தது! இதனின்றுதான் **"Shampoo"** என்ற ஆங்கிலச் சொல் தோன்றியிருக்கக் கூடும் என்றவாறு ஆங்கிலச் சொற்பிறப்பியலர் மிகப்பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்!

நாம், நம் மரபுக்கும் முறைமைக்கும் ஏற்ப **"Shampoo"** என்பதனைச் சீய்ப்புக்குரிய நெய் என்னும் பொருட்படச் சீய்ம்பு>சீம்பு என்றே சுட்டலாம். பழகப் பழக வழக்கில் வதிவுறும்!

# பாவலரேறு ஐயா அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

## தென்மொழி நினைவு மலர் வெளியீடு!

பாவலரேறு ஐயா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியும், 'தென்மொழி'யின் பாவலரேறு நினைவுமலர் வெளியீட்டு நிகழ்ச்சியும் திருக்குறள் மெய்ப்பொருளுரை அறிமுக விழாவும் தி.பி.2028 ஆடவை க ஞாயிறு(15.6.97) அன்று பவானியில் சிறப்புற நடைபெற்றன.

பவானி வட்டத் திருக்குறட் பேரவை, பெரியார் மாவட்ட உ.த.மு.க., தென்மொழி அவையம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற இவ்விழாவில், பவானிவட்டத் திருக்குறள் பேரவையின் 16ஆம் ஆண்டு விழா, 'பாவலரேறு பன்மணிமாலை' நூல்வெளியீடு ஆகியனவும் இடம் பெற்றன.

பவானிச் சுழற்கழகக் கட்டட அரங்கில் ஞாயிறு(15.6.97) முற்பகல் 10 மணிக்குப் புலவர் பொதிகைச் செல்வனார் தலைமையில், புலவர் இராமலிங்கம் அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. திரு.நாகேசுவரன் அவர்களின் வரவேற்புரையை அடுத்துச் சிந்தனைச் செம்மல் கு.ச.ஆனந்தன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் தூயதமிழ் அகரமுதலிகள் துறைத் தலைவர் சொல்லாய்வு அறிஞர் அருளியார், பாவலரேறு ஐயா அவர்களின் படத்தைத் திறந்துவைத்துத் திருக்குறள் மெய்ப்பொருளுரை நூலை வெளியீடு செய்து பெறுநர்க்கு வழங்கினார். முன்னதாகத் தவத்திரு மறைமலையடிகளார் படத்தை முனைவர் அரங்கச்செல்வனாரும் தவத்திரு.குன்றக்குடியடிகளார் படத்தை மாநிலத் திருக்குறட் பேரவைத் துணைத்தலைவர் தி.அ.சண்முக சுந்தரனாரும், 'குறளாயம்' வேலா அரசமாணிக்கனார் படத்தைத் திரு.செ.நா.குப்பமுத்து ஐயாவும் திறந்துவைத்து உரையாற்றினர்.

மருத்துவமணி இல.இராசாமி, திரு வேலா.மா.சத்திவேல், பூங்கொடி, நகரத் திருக்குறட் பேரவைத் தலைவர் சி.பெரியண்ணர், திரு வி.என்.சி.சிவகுமார் சார்பில் திரு அ.ச.பரமசிவம், முனைவர் கடவூர் மணிமாறன், திரு.இராம.கோவிந்தன், முனைவர் தென்முக நம்பி (தட்சணா மூர்த்தி), திரு.ஆ.ச.வரதராசன் ஆகியோர் சொல்லாய்வு அறிஞர் அருளியாரிடம் திருக்குறள் மெய்ப்பொருளுரை நூலைப் பெற்றுக் கொண்டனர். அனைவர் சார்பிலும் மருத்துவமணி இல.இராமசாமி ஏற்புரையாற்றினார். மறை.திரு.தாயுமானவன்

உரையாற்றினார். தமிழ்த்திரு.அருளியாரின் பேருரைக்குப்பின் புலவர் இறைக்குருவனார் நன்றி நவின்றார்.

அடுத்து மாலை 4 மணியளவில் 'பாவேந்தர்' இராமலிங்கம் அவர்களின் தலைமையில் நிகழ்ச்சி தொடங்கியது. தென்மொழி, ப.துரையரசன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து புலவர் இரா.வடிவேலனார் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு.பழ.நெடுமாறன் அவர்கள் தென்மொழியின் பாவலரேறு நினைவுமலரை வெளியிட்டார். தென்மொழி க.தமிழப்பன், தென்மொழி கா.இளமுருகன், புலவர் அறிவுடைநம்பி, தென்மொழி பாவை. நடவரசன், குறிஞ்சி க.சண்முகசுந்தரம், தென்மொழி நிலா. வேங்கடவன், வழக்குரைஞர் கி.சிதம்பரம், திரு.அருண்குமார், திரு,க.வீ.வேதநாயகம், திரு.கு. அப்பாச்சி ஆகியோர் மலரைப் பெற்றுக்கொண்டனர்.

திரு.ப.நெடுமாறன் அவர்கள் சிறப்புரையாற்றினார். உ.த.மு.க. துணைப் பொதுச் செயலாளர் தி.மு.அரசமாணிக்கனார், குறிஞ்சி சண்முக சுந்தரம், வழக்குரைஞர் கி.சிதம்பரம் ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர்.

அடுத்து, புலவர் பொதிகைச் செல்வனார் இயற்றிய 'பாவலரேறு பன்மணிமாலை' நூலைத் திரு.பழ.நெடுமாறன் அவர்கள் வெளியிட, புலவர் இரா.கருணாகரன், புலவர் செ.இராசு ஆகியோர் பெற்றுக்கொண்டு உரையாற்றினர்.

இரவு 7 மணிக்குத் திருக்குறள்மணி இறைக்குருவனார் தலைமையில் 'தமிழ் மேம்பாட்டிற்கான பெரும் பொறுப்பு மக்களுக்கா? அரசுக்கா?' என்னும் பொருள்பற்றிப் பட்டிமன்றம் தொடங்கியது. நடுவர் திரு.கு.வெ.கி.ஆசான் அவர்கள் தம் தொடக்கவுரையில், பாவலரேறு ஐயா அவர்களுடன் தாம் கொண்டிருந்த தொடர்புகள் குறித்தும், மொழித்தூய்மைக் கோட்பாட்டின் சிறப்புக் குறித்தும் விளக்கிப் பேசினார்.

'தமிழ் மேம்பாட்டிற்கான பெரும்பொறுப்பு மக்களுக்கே' என்னும் தலைப்பில் நகைச்சுவையரசு புலவர் த.ஆறுமுகனார், த.நா.மா.இலெ.க. மாநிலச் செயலாளர் கி.வே.பொன்னையன், புலவர் சி.முத்துச்சாமி ஆகியோரும், அப்பெரும் பொறுப்பு அரசுக்கே என்னுந் தலைப்பில் முனைவர் கடவூர் மணிமாறன், புலவர் இரா.கருணாகரன், பாவலர் மழைமகன் ஆகியோரும் உறழாடினர். புலவர் ப.ஆ.அரங்கநாதன் நன்றி நவின்றார்.

புலவர் இரா.வடிவேலனார், புலவர் பொதிகைச்செல்வனார் புலவர் தி.மு.அரசமாணிக்கனார் முதலானோர் முன்னின்று விழா நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். உள்ளூர், வெளியூர்களிலிருந்து அன்பர்கள் திரளாக வருகைதந்து கலந்துகொண்டனர்.

# தென் மாவட்டங்களில் சாதிவெறியாட்டம்
# தமிழீழத்தில் மக்கள் படுகொலை
# நாம் செய்ய வேண்டுவது என்ன ?

கருத்தரங்கம்

குருதி கொப்புளிக்கும் கொலைகள், தீ வைப்புகள், கடையடைப்புகள் இப்படியாகத் தென்மாவட்டங்களிலும்,

ஊரையே விரட்டி அடிப்பதும், தமிழர் சொத்துகளைச் சூறையாடுவதும், தமிழ்ப் பெண்களைக் குதறிக் கொலை செய்வதுமாகத் தமிழீழத்தில் வெறியாட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

தமிழ் உணர்வு, தமிழர் ஒற்றுமை குறித்து எண்ணுகிற நாம் இவற்றை நிறுத்துவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

எனவே, தென்மொழி அவையம் - இது குறித்து இயக்கங்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்பாட்டுக்குத் துணையாக ஆய்வுக் கருத்தரங்கம் ஒன்றைக் கூட்ட இருக்கிறது.

அக் கருத்தரங்கம் இரண்டு தலைப்புகளில் இருநாள்கள் நடக்க இருக்கிறது.

முதலாவதான கருத்தரங்கம்- கீழுள்ள செய்திகளின் அடிப்படையிலான தலைப்பைக் கொண்டுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத அளவு தமிழகத்தின் தென்மாவட்டங்கள் சாதித் தீயில் எரிந்து கொண்டிருக்கின்றன.

சாதிப்புழுக்களாய் நெளியும் உணர்வினராய் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழரின் சாதிவெறியாட்டம் மாந்த நேயமில்லாக் கொடூர நிலையில் உள்ளது.

ஆரியப் பார்ப்பன வல்லாளுமையை எதிர்த்துக் கிளம்பிய தமிழர்கள்-சாதி ஒழிப்பு குறித்துக் கூடுதலாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கடப்பாட்டை இவ்வெறியாட்டம் உணர்த்துகிறது.

அரசியல் கட்சியினரும், ஆளுமையரும் சாதி ஒழிப்பை எண்ணுவதாகவோ, சாதி வெறியாட்டம் இந்த அளவு தாண்டவமாடுகிறதே என்று கவலை கொள்ளுவதாகவோ தெரியவில்லை.

மாறாக சாதிப்பேயை வளர்ப்பவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர்.

சாதிப் பட்டங்களை இணைத்து எழுதுவதும், சாதிக்குள்ளாகவே

திருமணம் செய்து கொள்வதும் இன்னும் மாறிவிடவில்லை.

தலைவர்கள் பெயர்களில் சாதியை ஒட்டவைத்து அழகு பார்த்து, சாதியை வளரவிட்டு - இன்றைக்குத் தமிழகத் தலைவர்கள் பெயர்களையெல்லாம் நீக்கவேண்டிய அவலத்தை ஏற்றுக் கொள்கிற நிலைக்கு நாம் வந்திருக்கிறோம்.

தமிழர் - எனப் பொதுப்பட எண்ணுகிற போக்குக்கு நாமே தடைச்சுடர்களை எழுப்பி ஆளுமை செய்துகொண்டும், அடிமைப்பட்டுக்கொண்டும் இருக்கிறோம்.

தீண்டப்படாத தமிழன், தீண்டுகிற தமிழன் என்ற வேறுபாடுகளை அழிக்கிற முனைப்பு நம்மிடம் இல்லை.

இத்தகைய போக்குகளை மாற்றாமல் - சாதி ஒழிப்பு என்பது எளிதாக நடந்து விடுகிற செய்தி இல்லை.

அவ்வகை முயற்சி இல்லாமல் போனால் - இவ்வகைச் சாதி வெறியாட்டங்கள் நிற்கப் போவதுமில்லை.

சாதிப்புழுக்களாய் நெளியும் தமிழன் - தமிழர் என்கிற அணிசேர்க்கையில் திரளப் போவதுமில்லை.

எனவே சாதிவெறியாட்டத்தை எவ்வகையில் தடுக்கப் போகிறோம் - என்கிற தெளிந்த பார்வை நமக்குத் தேவை.

அப்பார்வைக்கு - இவ்வெறியாட்டங்கள் ஏன் நடைபெறுகின்றன என்கிற பட்டறிவுக்காகவும் - அது குறித்து அதை ஒழிக்க நாம் என்ன செய்ய வேணடும் என்கிற நோக்கத்திற்காகவுமே இக் கருத்தரங்கம் தன்முதல் தலைப்பை மேற்கொண்டிருக்கிறது.

அடுத்த தலைப்பிற்கான செய்தி ஈழத்தைப் பற்றியது.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இந்த அவலநிலை என்றால் தமிழீழத்தின் நிலையும் மிகக் கொடுமையானதாய் இருக்கிறது.

தமிழீழ மக்களைக் கொன்று குவித்து - பெண்களைக் கற்பழித்து - இளைஞர்களைச் சுட்டுவீழ்த்தும் கொடூரங்கள் நாளுக்கு நாள் மிகுதியாகிக் கொண்டே இருக்கின்றன.

அன்றைக்கு - தமிழீழத் தமிழர்க்கு ஆதரவாய்க் கட்சியைக் கடந்து, சாதியைக்கடந்து இந்திய அரசின் அடக்குமுறையைக் கடந்து எழுந்த தமிழர்கள் -இன்றைக்கு உரக்கப் பேசவும் அஞ்சும் கோழைகளாய் அடக்கப்பட்டுள்ளனர்.

-தமிழீழத்திற்கான ஆதரவுப் பேச்சுகள்கூட உண்மையாக இல்லாமல் தம் கட்சி நலனுக்காக என்றே அரசியல் கட்சிகளால் பேசப்படுகின்றன.

உண்மையாகவே ஆதரவு தெரிவித்து இயங்குகிற இயக்கங்களுக்குள் புகுந்துகொண்டு ஆதரவாகவும், ஆதரவை மறுத்தும் - ஈழத் தமிழர் பாதுகாப்புச் செயல்களைக்கூட அரசியல் சாயம் பூசிச் சிரழிகிற

போக்குகளே இன்றைக்கு மிகுதியாகிவிட்டன.

பிளவுபட்ட இச் சூழலில் நரிகளாய் இந்து அமைப்புகள் சிலவும் தம் வால் நீட்டிக் கிழறுப்புக்குத் திட்டமிடுகின்றன.

தமிழீழ விடுதலைக்கும், தமீழிழ மக்களின் பாதுகாப்புக்கும் ஆதரவு தெரிவிப்பதில்கூட உண்மையானவை - உள்நோக்கம் கொண்டவை என்கிற போக்குகள் கிளர்ந்துவிட்டன.

இத்தகைய சூழலில் - தமிழீழ மக்கள் மீதான படுகொலையைத் தடுத்து நிறுத்துவதும், அம் மக்களின் பாதுகாப்புக்கான- உண்மை ஆதரவுகளை ஒன்றிணைப்பதும் நம் கடமை ஆகிறது.

அக் கடமையின் அடிப்படையிலான செயல்பாட்டை நாம் எவ்வகையில் மேற்கொள்ளுவது என்பதுவே இக் கருத்தரங்கத்தின் இரண்டாம் தலைப்பு.

- ஆக - நாம் செய்ய வேண்டியவற்றை ஆய்வு செய்யும் இக் கருத்தரங்கம் வரும் மடங்கல் திங்கள் உக, உஉ - ஆகிய நாள்களில் (செ. 5,6) நடத்தத் திட்டமிடப்பெற்றிருக்கிறது.

தென்மொழி அன்பர்களும், ஆர்வலர்களும் துணைநிற்கக் கேட்டுக் கொள்கிறோம்.

**- தென்மொழி அவையம்,**
அமைப்பாளர்:
**திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார்,**
*5,* அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - *5.*

## ஏடல் நிலையம் அமைக்கப்படுமா?

**வ**ணிக நிலையங்களும் பிறவும் தமிழில் பெயர்ப்பலகை வைப்பது தொடர்பாகத் தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனளிக்கத் தொடங்கியிருக்கின்றன. Bakery, Pen center, CoffeeBar முதலானவெல்லாம் அடுமனைகளாகவும், தூவல்நிலையங்களாகவும், குளம்பி நிலையங்களாகவும் ஆங்காங்குப் பளிச்சிடுகின்றன. ஆனால் மாற்ற நினைக்கும் பலர், சரியான வழிகாட்டுதலின்றித் தடுமாறிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

பெயர்ப்பலகைகளை மாற்ற முன்வருவார்க்குத் தக்க வழிகாட்டிக் கருத்துரை வழங்குதற்கு அமைச்சகத்தின் சார்பில் ஏடல் நிலையம்(ஆலோசனைக் கூடம்) ஒன்று அமைத்துத் தொலைபேசித் தொடர்பு அஞ்சல் தொடர்புக்கு வாய்ப்பு ஏற்படுத்தினால் எதிர்பார்க்கும் அளவு மாற்றங்கள் விளையும் என்பதில் ஐயமில்லை. அரசு கவனத்திற்கொண்டு ஆவன செய்யுமா?

**- செங்கதிர்,** சென்னை-17.

# நாட்டாண்மையும் தலையாரியும்

▲ *'புதிய சனநாயகம்' (1997, மே-31) என்னும் இதழின்கண், மொழித் தொடர்பாகவும், அவ்விதழின் பெயர்பற்றியும் எழுப்பப்பட்டுள்ள இரு வினாக்களுக்கான மறுமொழியில் "தென்மொழி போன்ற தனித்தமிழ் ஏடுகளேகூடச் சரியான, முழுமையான பொருள் தர முடியாமற் போகும்போது அடைப்புக்குறிக்குள் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதைக் காணலாம்" என்று சுட்டிக் கூறப்பட்டுள்ளது. இது பற்றியும், மொழித்தொடர்பான அதன் கருத்துப் பற்றியும் என்ன கூறுகிறீர்கள்?*

**- இரா. கல்விச்செல்வன்**, நெல்லிக்குப்பம்

**0** கட்டுரைகள் முதலான படைப்புகள் எவற்றிலும் பிறமொழிச் சொற்கள் இடம்பெறக் கூடாது; மக்கட் பெயர்கள், ஊர்ப்பெயர்கள் முதலிய சிறப்புப் பெயர்களைத் தவிரப் பிறமொழிச் சொற்களெல்லாம் தமிழாக்கம் செய்யப்பட வேண்டும்; சிறப்புப் பெயர்களைக்கூடத் தமிழியல்புக் கேற்ப வரியும் ஒலியும் பெயர்த்து எழுதவேண்டும் என்பதே தென்மொழிக் கொள்கை. தமிழாக்கச் சொற்கள் புதியன வாகவோ, அருகிய வழக்கினவாகவோ இருப்பின் அவற்றை அறிமுகப்படுத்தும் போது அப் பிறமொழிச் சொல்லும் அடைப்புக் குறிக்குள் இடம்பெறும். (எ-டு: பொறிமிதி(Moped); கரிசு (பாவம்); ஆத்திரேலியா.) இது விளக்கத்துக்காகவே யன்றிச் சரியான, முழுமையான பொருள்தரமாட்டாது என்பதற்காக அன்று.

இனி, அவ்விதழில் இடம்பெற்றுள்ள மொழித் தொடர்பான இருவினாக்களுக்கான விடையில், பிறமொழிகள் தமிழைச் சிதைப்பதையும் மேலாண்மை செய்வதையும் தமது தோழைமை அமைப்புப் பல வழிகளில் எதிர்த்து வருவதாகவும், கிசுகிசு ஏடுகள் மணிப்பிரவாள நடையின் மூலம் ஆங்கிலத்தைத் திணித்துத் தமிழைக் கொச்சைப் படுத்துவதையும் எதிர்ப்பதாகவும், "சரியான பொருள் தருபவை, பிரபலமாகப் புழக்கத்தில் உள்ளவை என்பதால்தான் ஜனநாயகம், கலாச்சாரம் என்பவற்றைப் பயன்படுத்துகிறோமே தவிர, வடமொழி, இந்தி மோகத்தால் அல்ல. தமிழ் மீதான பற்றுக் குறைவினால் அல்ல" என்றும், பிறமொழித் திணிப்பை எதிர்ப்பதன்றிக் கலப்பை எதிர்க்கவில்லை யென்றும், பிறவாறும் கூறப்பட்டுள்ளது.

மொழி என்பது ஒரு வகையில் சொற்றொகையே யாகையால், மக்களின் பல்துறை வளர்ச்சிக் கேற்ப, மொழியில் புத்தம் புதிய சொற்கள் தோன்றிக்கொண்டே இருத்தல் வேண்டும். அல்லாக்கால்

அம்மொழி, மக்களின் நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படாமற்போய்,அவர்தம் இயல்பான அறிவு வளர்ச்சி குன்றும்; அம்மக்களினம் நாளடைவில் நரங்கிவிடும். தமிழில் தேவையான புதிய சொற்கள் தோன்றவிடாதபடி, வாய்க்கும் இடத்திலெல்லாம் பிறமொழிச் சொற்களையே புகுத்தி நிறைப்பதும், இருக்குஞ் சொற்களையும் புறக்கணித்தொதுக்குவதும் இயல்பான தமிழ் வளர்ச்சியைத் தடுத்தலும் சிதைத்தலுமேயாம் என்பது ஒருதலை.

பிறமொழிக் கலப்பால் இயல்பான தமிழ்கெடும் என்னும்போது, கொச்சை நோக்குடைய கிசுகிசு ஏடுகளின் ஆங்கிலமானால் என்ன; கொள்கை கோட்பாடு பேசுவனவும் பிறவுமான ஏனை ஏடுகளின் அயன் மொழிகளானால் என்ன? எரிகிற கொள்ளியில் எக்கொள்ளி நற்கொள்ளி?

மொழித் தொடர்பான இரு வினாக்களுக்குரிய மறுமொழியாக அவ்விதழில் இடம்பெற்றுள்ள இரு பாகியில்(para) மட்டும் ஆதிக்கம், பிரபலம், மோகம், விவாதம், ஜனநாயகம், கலாச்சாரம், அங்கம், நட்சத்திரம், ஆபாசம், அந்நியம், பத்திரிக்கை. பதில் என்னும் பதின்மூன்று பிற மொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. தாளிகையைக் குறிக்கும் ஏடு என்னுஞ் சொல் தெரிந்து, ஈரிடத்துப் பயன்படுத்தியிருந்துங்கூட "எமது பத்திரிக்கைப் பெயர்கள்" என்ற விடத்துப் பிறமொழிச் சொல்லை அவர்கள் பயன் படுத்தியிருப்பதுதான் குறைவற்ற தமிழ்ப் பற்றுக்கு எடுத்துக்காட்டுப் போலும்!

'ஜனநாயகம்' என்பது இயற்சொல்லன்று. அது Democracy என்னும் ஆங்கிலச் சொல்லின் மொழி பெயர்ப்பே. தமிழில் அது குடியரசு என்றும், Republic என்பது குடியாட்சி என்றும் குறிக்கப்பெறுகின்றன; தமிழுணர்வாளர்களிடையே வழக்கிலும் இருக்கின்றன. ஏற்பில்லை என்றால், குடிநாயகம், மக்கள் நாயகம், நரவரசு, நரநாயகம் என்னுந் தொடக்கத்தனவற்றுள் ஏதேனும் ஒன்றை வரையறுத்துக் கொள்ளலாம். இயல்பான உள்ளத்தோடு எண்ணினால் தமிழ்ப் பற்றுக் குறைந்தவர்களுக்குங் கூட நல்ல சொல் கிட்டாமற் போகாது.

மக்கள் நடைமுறையில் 'பழக்க வழக்கம்' என்பதே கலாசாரம். கலாச்சாரம் என்று கூறபடுகின்றது. அது Culture என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாகவும் வழங்கப்படுகின்றது. அதற்குப் பண்பாடு என்னுஞ் சொல்லே ஏற்கும். நாகரிகம், பண்பாடு என்னுஞ் சொற்கள் தமிழில் இயல்பாய் இருக்க அவற்றை விட்டுவிட்டுக் கலாச்சாரம் என்னும் பிறமொழிச் சொல்லை எடுத்துக் கொண்டு அதற்குக் கூறப்படும் மாற்றுச் சொல் சரியான , முழுமையான பொருள் தரவில்லை என்று கூறுவதற்குக் கரணியம் பிறமொழியின்பால்கொண்டுள்ள மையல் என்பதன்றி வேறென்ன?

கலை + ஆசாரம் = கலாசாரம் என்னும் இருபிறப்பிச் சொல்லில் கலை என்பதன் பொருள் வெளிப்படை; ஆசாரமாவது ஒழுக்கம். அது இன்று வழங்கும் பொருளைக் குறிப்பதற்கு அப்பொருள் குறித்த பெருவழக்கே கரணியம். பண்பாடு என்னும் சொல் அதற்குச் சரியான முழுமையான பொருளுடையதன்று என்று தோன்றினும் ஆட்சி அழுத்தம் பெறும் போது அப்பொருளைக் குறிக்காமற் போகாது. 'கட்டுரை', 'நன்றி' என்னுஞ் சொற்கள், இன்று வழங்கும் பொருளைப் பண்டு முழுமையாகக் கொண்டிருந்தனவல்ல.

திணிப்பை எதிர்க்கிறோம்; கலப்பை எதிர்க்கவில்லை யென்கிறார் அவ்விடையாளர். தமிழ் பிறமொழித் திணிப்பினாலும் கெடும்; கலப்பினாலுங் கெடும். நஞ்சைக் கட்டாயப் படுத்திப் புகட்டினாலும், இயல்பாக ஊட்டிவிட்டாலும் விளைவு ஒன்றுதானே!

இன்ப துன்பங்களையும் நீர்ச்சீலையையுங் குறிக்கும் சுகதுக்கம், கோவணம் என்னுஞ் சொற்கள், வடநாட்டு மக்களிடையே சிறிது பிறழ்ந்து வழங்குவது கண்டு வியப்படைந்தாராம். வட செற்களான அவை அவ்வாறு வழங்குவதில் வியப்படைவதற்கு என்ன இருக்கிறது? அவை தமிழ்ச் சொற்களென்று கருதிக்கொண்டிருக்கிறார் போலும்! இவர்தம் 'புழக்கத்தில்' வந்ததை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை" என்று அறுவுறுத்துகிறார்! அட்டா... என்னே தமிழ் அறிவு; என்னே மொழியாராய்ச்சி!

வியப்புதான்! தென்மொழியைச் சுட்டி எழுதியமையாலேயே யாம் இத்துணையும் எழுதவேண்டியதாயிற்று.

▲ *'சொலிப்பு' தமிழா ?* —**தமிழ்முகிலன்**, திருச்சி

**0** சுல் என்பது வெப்பக்கருத்து வேர்ச்சொல். அடுப்புக்குச் சுல்லி என்பதும் ஒரு பெயர். சுல் என்பது சுள் எனத் திரிந்து வெயிற்சூட்டையும், சுள்ளை என்றும் சூளை என்றும் ஆகி மட்கலஞ் சுடுமிடம், காளவாய் ஆகியவற்றையும் குறிக்கின்றது.

'சுல்-சொல்-சொலி சொலித்தல் = எரிதல், ஒளிர்தல்' என்பது மொழிஞாயிறு பாவாணர் தரும் விளக்கம். தமிழின் சொலிப்பே வடமொழியில் 'ஜொலி'க்கின்றது. சொள்ளு(வாய்நீர்), 'ஜொள்ளு' ஆவதுங்கூட இப்படித்தான்! ஒப்பு நோக்குக: சாடி-ஜாடி; சுரம்-ஜுரம்.

▲ *ஊரகங்களில் நாட்டாண்மை, தலையாரி வழக்கத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சங்கராச்சாரியார் சொல்லியிருக்கிறாரே, இது பற்றி என்ன கருதுகிறீர்கள்?*

- **உலகமுதல்வன்**, திருவொற்றியூர்

**0** சங்கராச் சாரியாரின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் வெட்டியான், தலையாரிகளாகவும், ஆண்டாண்டுக் காலமாகச் சாதியின் பெயரால் அடக்கியொடுக்கப்பட்டும், இன்றைக்கும் நடைமுறையில் உரிமைகள் மறுக்கப்பட்டும் கிடப்பவர்கள் நாட்டாண்மைக்காரர்களாகவும் வர வாய்ப்பிருந்தால் நாம் அதனை முழுமனத்தோடு வரவேற்கலாம்.

-சூரிசில்

# பாவலரேற்றின் உரைநடைத்திறன்

முனைவர் கடவூர் மணிமாறன்

பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாப் புனைவதில் மட்டுமல்லாமல் உரைநடை எழுதுவதிலும் தனித் திறம் பெற்றுத் திகழ்ந்தார். இவரின் உரைநடையைச் சுருங்கக் கூறின் ஏறுபோல் பீடு நடையினது எனலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆறுமுக நாவலர் காலத்தைத் தமிழ் உரைநடையின் வளர்ச்சிக் காலம் என்பர். ஐரோப்பியர் வருகையால் முகிழ்த்தது உரைநடை என்றும் குறிப்பிடுவர். இறையனார், அடியார்க்கு நல்லார், ஆறுமுக நாவலர், மறைமலையடிகள், திரு.வி.க., மு.வ. போன்ற எண்ணற்ற அறிஞர்கள் வாயிலாக உரைநடைத் தமிழ் ஓங்கி வளர்ந்தது.

இன்றைய தமிழ்ச் சிறுகதை, புதின எழுத்தாளர்கள் பெரும்பாலனோர் தமிழைச் சிதைத்தும் சீரழித்தும் வருவது அனைவரும் அறிந்ததே. இருபதாம் நூற்றாண்டில் கலப்புத் தமிழ்நடை, பேச்சுத் தமிழ்நடை, எதுகை மோனைத் தொடைநடை, தனித்தமிழ் நடை, செந்தமிழ்நடை, மறுமலர்ச்சி நடை எனப் பல நடைகள் காணப்படுகின்றன. தென்மொழி எனும் தூய தமிழ் மாத ஏடு பெருஞ்சித்திரனாரின் உரைநடைத் திறத்திற்கும் தனித்தன்மை வாய்ந்த களமாகியது. நாளடைவில் தென்மொழி ஓர் இயக்கமாகவே வளர்ந்தது. தமிழ் இளைஞர்களைக் கவர்ந்தது. இந்த இயக்க வேகத்தைப் பின்புலமாகக் கொண்டு இவரின் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் உருக்கொண்டது. இதழ்ப் பணியும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் என விரிந்து படர்ந்தது. இதன் பயனாக எழுத்திலும் பேச்சிலும் பெருஞ்சித்திரனாரின் முனைப்பான உரைநடைத் திறம் முளைவிட்டு வளர்ந்து, கிள்ளை பரப்பி, விழுதெனப் படர்ந்தது.

ஒரு படைப்பின் தன்மையை அளவிடும் பல்வேறு உத்திகளில் நடையை ஆய்வதும் ஒன்று. பழகுதமிழை அழகுத் தமிழாய்ப் படைக்கின்ற ஆற்றல் கைவரப்பெற்றவர் பெருஞ்சித்திரனார். மறைமலையடிகளும் தேவநேயப்பாவாணரும் தனித்தமிழ்ப் பயிற்சிக்குத் தடம் அமைத்தனர் எனினும் அதை ஓர் இயக்கமாகவே மக்கள்மயப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

**புத்துயிர் தந்தவர்:** "உரைநடை யாயினும் செய்யுள்நடை யாயினும் படைப்பாளரின் தனித்தன்மையை யொட்டியே அவ்வுநடைய

* இந்தியப் பல்கலைத் தமிழாசிரியர் மன்றத்தின் 28-ஆம் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை.

படைப்பிலே நடை அமைகிறது. படைப்பாளர் பயன்படுத்தும் சொற்கள், சொற்றொடர்கள், மாற்றியமைக்கும் திறன், தொடரிய அமைப்பு, ஒலிநயம் போன்றவை அவருடைய தனித்தன்மைக் கேற்பவே அமைவனவாகும். கருத்து, உணர்ச்சி இவற்றின் தெளிவிற்கேற்ப நடை செம்மைபெறுகிறது."1. என்னும் கருத்திற்கேற்பத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய மூன்று இதழ்களிலும் அவ்வப்போது தீட்டிய கருத்தாழமும் உணர்ச்சியும் வாய்ந்த ஆசிரியவுரைகள், அறிக்கைகள், திறனாய்வுக் கட்டுரைகள் எனப் பல நிலைகளிலும் உரைநடைக்குப் புத்துயிர் ஊட்டியவர் பெருஞ்சித்திரனார்.

இவர் எழுதியுள்ள உரைநடை நூல்கள் பல. இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்(1973), தன்னுணர்வு(1977) ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் (1979) தமிழா எழுச்சி கொள்!(1979) இனம் ஒன்றுபடவேண்டும் என்பது எதற்கு? (1894) பாவேந்தர் பாரதிதாசன்(1984)செயலும் செயல்திறனும் (1988) தமிழ் ஈழம் (1990) ஓ!ஓ! தமிழர்களே! (1991) இளமைவிடியல் (1995) ஆகியன இவரின் குறிப்பிடத்தகுந்த உரைநடை நூல்கள்.

மகபுகுவஞ்சி, எண்சுவை எண்பது, இளமை உணர்வுகள், உலகியல் நூறு, வாழ்வியல் முப்பது, ஐயை, நூறாசிரியம் ஆகிய நம் பாநூல்களுக்கும் கவின் மிகுந்த உரையினை இவரே எழுதியுள்ளார். அனைத்துக்கும் மேலாக, என்றும் நின்று விளங்கத்தக்க வகையில், இதுவரை எவராலும் எழுதப்பெறாத அளவு திருக்குறளுக்கு மெய்ப்பொருள் உரையினை(இல்லறவியல்முடிய) மிக விளக்கமாகவும் இலக்கண, இலக்கிய மேற்கோள்களுடனும் கருத்துச் செறிவுற எழுதியுள்ளது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

நூறாசிரியத்துக்கு உரை எழுதியமைக்கான கரணியத்தைக் கூறுங்கால், "பாடல்களுக்குப் பொழிப்பும் விரிப்பும் கொடுக்கப் பெற்றுள்ளன. தமிழ் நலம் நாடுவோர்க்கும் இலக்கிய நயந்துய்ப்பார்க்கும் அவை பெரிதும் துணையாக விருக்கும். புரையும் கறையும் மிகுந்த போலி இலக்கியப் படைப்பு மிகுந்த இக் காலத்தில் நிறையும் விரையும் கலந்த இத்தகைய நூல்கள் வாழ்க்கைக்கு ஒளியும் வழியும் காட்டுவன என்பதைப் படிப்பார் தெள்ளிதின் உணர்வர் "2 என்று தம் உரைநடை ஆற்றலைப் புலப்படுத்தியுள்ளார் பெருஞ்சித்திரனார்.

இளமைக்கு வளஞ்சேர்த்து விழிப்பூட்டும் படைப்பாகிய இளமை உணர்வுகள் என்னும் நூலில் மலர்களின் மென்மை, மனக்களிப்பின் துள்ளல், வான் பறவையின் சிலிர்ப்பு, வரிப்புலியின் எழுச்சி, கிளரிள மையின் துடிப்பு, கிறக்கவுணர்வின் புதிர்மை அனைத்தும் கொண்டது இளமைப் பருவம். ஆக்கத்தின் கொடுமுடியும் அது; அழிவின் பள்ளத்

தாக்கும் அது. ஏற்றமும் அதுதான்! இழிபும் அதுதான்! விளைவுகள் அவரவர் விதைப்புக்குத் தக்கபடி"3. என்று இளமை உணர்வுகள் பற்றிய தம் கருத்தினை எழிலார்ந்த நடையில் எடுத்துரைத்துள்ளார்.

உரைநடை என்பது யாது? "ஒளி தராதது சுடராக இருக்க முடியாது. உள்ளொளி தராததும் பாட்டாக அமையாது. உரைநடை உருள்கடலை (பட்டாணி)யை மூடியுள்ள மெல்லிய மேல் தோலைப்போல்வது. பாட்டு பருப்பை யொப்பது! பாட்டுள் உரைநடையில்லை , பறக்கின்ற பறவை கால்களால் நடப்பதைப் போலப், பாட்டு உரைநடையில் தத்துகின்றது"4 என்று உரைநடைக்கு ஒப்பற்ற விளக்கம் அளித்துள்ளார் பெருஞ்சித்திரனார்.

இந்நூற்றாண்டில் தமிழ் உரைநடைக்கு வலிவும் பொலிவும் சேர்த்தவர்கள், மறைமலையடிகள் திரு.வி.க., தேவநேயப் பாவாணர் ஆகியோர் எனலாம். மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் கண்டவர். தொடக்கக் காலத்தில் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதினாலும் பிற்காலத்தில் தூய தமிழ் நடையில் எழுதித் தமிழ் உரைநடைக்கு உயிர் சேர்த்தவர் ஆவர். பேச்சுத் தமிழின் சாயல்படிந்த செந்தமிழ் நடை திரு.வி.க.நடை. தனித்தமிழையும், தமிழின் பழந்தன்மையையும் திராவிட மொழிகளின் ஒப்பீட்டு வரலாற்றுப் பயன்களையும் தமிழர்கள் நெஞ்சில் நிலைக்கச் செய்தவர் ஞா.தேவநேயப்பாவாணர்.

அப்பெருமகனாரைப் பின்பற்றிப் பேச்சு, உரைநடை, பாவியம், நாடகம் எல்லாவற்றையும் தனித்தமிழிலேயே படைத்து, இவற்றை விருப்போடும் பெருமையோடும் படிக்கிற பல்லாயிரவரைத் தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் உருவாக்கித் தனித்தமிழுக்கு அரணாக விளங்கியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

தமிழே உலக முதன்மொழி என்பதை மெய்ப்பிக்கத் தொடங்கிய பாவாணரைத் தமிழுலகுக்குக் காட்டியவர் இவர்.

*முன்புதை யுண்ட முத்தமிழ்ச் சிறப்பிணை*

*மன்பதைக் குணர்த்தல் என் மன்னுயிர் வாழ்க்கை!*

என்ற 'பா' அடிக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் பெருஞ்சித்திரனார்.

**வளமார்ந்த உரைநடை:** மொழித்தூய்மை, இனத்தூய்மை, நிலத்தூய்மை என்னும் மூன்றும் பெருஞ்சித்திரனாரின் பணித்தளத்தின் உறுதியான மூன்று கடைக்கால்கள் ஆயின. தமிழில் பிறமொழிக் கலப்புக் கூடாது; தமிழர்களிடையே தமிழுக்குப் புறம்பான சாதி, மதக் கலப்புக் கூடாது; தமிழ் நாட்டிலே தமிழனை ஆளுமை செய்யும்

அயலவர் ஆட்சி கூடாது என்னும் மூன்று நெறிகளையும் முதன்மையாகக் கொண்டிருந்தார் பெருஞ்சித்திரனார்.

**ஓ!ஓ! தமிழர்களே!** "இச் சொற்பொழிவு நூல் தமிழினத்திற்கென்று அமைவாக, அதன் தாழ்ச்சி வீழ்ச்சிகளையும் எதிரிகளின் ஆட்சி சூழ்ச்சிகளையும் அவர்களோடுற்ற நம் இன இரண்டகர்களின் கரவு உறவுகளையும் இற்றை நாள் அரசியல், பொருளியல், குமுகவியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, ஒப்பவைத்துக் காட்டி உரைக்கும் சிறந்ததொரு நிறை கருத்து வெளிப்பாட்டு நூலாகும்"**5** இதுவென்று தாம் எழுதிய ஓ!ஓ! தமிழர்களே! என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிடுவதனைக் கொண்டே இவரின் உரைநடைத் திறம் தெற்றெனப் புலனாகும்.

**கற்பனை ஊற்று:** உரைப்பா(வசனகவிதை) நடையில் 21 கட்டுரைகள் கொண்ட 'கற்பனை ஊற்று' பெருஞ்சித்திரனாரின் பிறிதொரு நூலாகும். மெய்யறிவும் கற்பனை யாழமும் கலையழகும் பொருள் நுட்பமும் சொற்செறிவும் மிகுந்தன இக் கட்டுரைகள். "பிழிந்த சாற்றையும், எடுத்து விழுங்கும் உணவுச் சில்லுகளையுமே தம் இரைப் பொருள்களாகக் கொள்ளப் போகும் எதிர் கால மாந்தர்க்குச் சிறு சிறு சொற்களால் அமைந்த கருத்து முடிச்சுகளே அவர்தம் உணர்வு விழிப்புத் திறனுக்கு ஏற்றனவாக விளங்கும்" என்று இந்நூலுட் புகுமுன் ஒரு சொல்லாக இவற்றைக் குறிப்பிட்டுத் தம் உரைநடைத் திறத்தை வெளிப்படுத்துகின்றார்.

வானளந்த பொருள்களை வகையறிந்து சொல்லும் வளம் நிறைந்தது தமிழ். மூச்செல்லாம் மொழிக்கீந்து முழுவாழ்வு கொண்டு இருந்த தமிழன், இன்று முடமாகிக் கிடப்பது முற்றிலும் உண்மையே! சொந்த மொழியை மறந்துவிட்டு வந்த மொழிக்கெல்லாம் வரவேற்பு வழங்கிக் கொண்டிருக்கிறான். வெறும் கிளிப்பிள்ளையாகி வேற்று மொழியை ஒப்பிக்கும் இவன், அந்த மொழிநடையில் சொந்த மொழியைச் சொல்லிப் பார்க்கிறான்; எழுதிப் பார்க்கிறான்.

முடிவுரை:

இன்று தமிழர்கள் பெரும்பாலானோர் எழுதும் தமிழ் கொச்சையானது; குற்றமுடையது; பொருள் மாறுபடும் புன்மையுடையது என்பதில் ஐயமில்லை. தமிழை எப்படி எழுதினாலும் தட்டிக் கேட்க இன்று தமிழகத்தில் எவருமில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. லுங்கினான்(லுங்கி கட்டினான்) மணி டிரிங்கியது(மணி ஒலித்தது) என்றெல்லாம் புதுமை என்னும் போலித் திரைக்குள் புகுந்துகொண்டு தவறு செய்வோரும் அறியாமையால் பிழை புரிவோரும்

பெருஞ்சித்திரனாரின் செம்மாந்த உரைநடையைப் படித்துக் குறைகளைக் களைந்தெறிய முற்படவேண்டும்.

தமிழ் வாழவும் வளரவும் தமிழியச் சிந்தனைகள் பெருகவும் வீறு கொண்டெழவும் தூண்டுகோலாக யாண்டும் விளங்கிடும் வலிமைவாய்ந்த பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் உரைநடை, தனித்தன்மையானது; திறம் வாய்ந்தது; சீர்மைமிக்கது.

குறிப்புகள்:

*1. சத்திவேல் சு, நூற்றாண்டுத் தமிழ் உரைநடை, ப.18*

*2. பெருஞ்சித்திரனார், நூறாசிரியம், முன்னுரை! IV, V*

*3. பெருஞ்சித்திரனார், இளமை உணர்வுகள், மேலட்டைமுகப்பு*

*4. பெருஞ்சித்திரனார், கற்பனை ஊற்று, பக் 63, 64*

*5. பெருஞ்சித்திரனார், ஓ!ஓ! தமிழர்களே முன்னுரை.*

## தென்மொழி நன்கொடை வரவுகள்

***1-3-97*** முதல் - ***30-6-97*** முடிய

| | | |
|---|---|---|
| 1. | சே.எம்.அந்தோணிதாசு - வெங்காலூர் | 101.00 |
| 2. | ஈசுவரமூர்த்தி - பல்லடம் | 2.00 |
| 3. | பி.கோபாலகிருட்டிணன் - பள்ளிப்பாளையம் | 2.00 |
| 4. | அ.பொன்னுச்சாமி - ஈரோடு | 2.00 |
| 5. | சீ.பழனியப்பன் - ஈரோடு | 2.00 |
| 6. | இரா. பத்மநாபன் - மதுரவாயல் | 27.00 |
| 7. | ப.அறிவுடைநம்பி - சோமன் கோட்டை | 500.00 |
| 8. | முத்துப்பாண்டியன் - வேட்டங்காடு | 2.00 |
| 9. | அப்பாச்சி - பவானி - | 2.00 |
| 10. | க.வீரபத்திரன் - பொள்ளாச்சி | 2.00 |
| 11. | பாவலர் தமிழேந்தி - அரக்கோணம் | 2.00 |
| 12. | | |

திருப்பராய்த்துறைத் திரு.நா.அன்புச்செல்வன் வழி (நா.அன்புச்செல்வன், ந.இலெட்சுமி தேவி, ந.மலர்விழி, ந.செந்தாமரை, ந.செல்வம் ஆகியோரும், சிதம்பரம் நா.வயிரவன், வ.சிறீதர் ஆகியோரும், பெருஞ்சேரி நா.இரவி, நா.சாந்தி, கு.நாகலிங்கம் ஆகியோருமான பதின்மர் தலைக்குப் பத்து உருவா மேனி) உரு. 100.00

# எழுக தமிழினமே! எழுக!

– பாவலர். கொ.செ. சின்னப்பனார்

தொல்லுலகில் முதன் முதலில் தோன்றியவன் தமிழன்
தமிழ்மொழியைத் தோற்றுவித்து வளர்த்தவனும் தமிழன்
சொல்லு தொழில் கலைபலவும் கண்டவனும் தமிழன்
தீமைதவிர் அற நெறியை வகுத்தவனும் தமிழன்
மெல்லியல்பாம் அன்பருளும் வீரமொடு பண்பும்
மேலான நல்லறிவு கொண்டவனும் தமிழன்
நல்லவனாய் வல்லவனாய் வாழ்ந்தவனும் தமிழன்
நானிலத்தில் மிகப்புகழோன் நந்தமிழன் தானே!

உலகினிலே உயிர்தோன்றிப் படிப்படியாய் வளர்ந்தே
உயர்மாந்த இனமாகத் தான் மாறிற் றென்றே
இலகுபுகழ்த் தொல்வரலாற் றறிஞர்அறி வியலார்
இயம்புவது நம்மினம்தான் வேறுஇன மன்று
வலிவோடு பொலிவோடு நாகரிகத் தோடு
மறைந்திட்ட தொல்குமரி சிந்துவெளி வாழ்ந்தே
அலகில்லா மீப்புகழை நிலைநாட்டி வைத்தோன்
அருந்தமிழன்! அருந்தமிழன்! அருந்தமிழன் தானே!

மொழியளித்தான் உலகிற்கே தொழில்களையும் அளித்தான்
மிகவுயர்ந்த வாழ்வுநெறி அரசுநெறி தந்தான்
அழியாத உயர்ந்தபெரும் பண்பாட்டை ஈந்தான்
அலை கடலைத் தான்கடந்தே அவன் வணிகம் செய்தான்
உழைப்புத்தான் உயர்வென்னும் கொள்கையொடு வாழ்ந்தான்
உயர்மாந்தப் பண்பென்னும் உச்சியிலே நின்றான்
அழித்திட்டான் தன் பெருமை சிறப்பெல்லாம் அந்தோ!
ஆரியத்தை வரவேற்றான் தாழ்ந்திட்டான் இன்றே.!.


ஆரியத்தை வரவேற்றான் தன்பெருமை எல்லாம்
அடியோடு மறந்திட்டான் தன்னையுமே மறந்தான்
பூரியரின் ஏமாற்று வலைதனிலே சிக்கிப்
புலையர்களாய்ச் 'சூத்திரராய்' ஆனானே ஆனான்
பாரினிலே எங்குமிலா இழிமாந்த னாகப்
பைந்தமிழன் வாழுகிறான் இந்நிலையை மாற்ற
வீரமொடு உணர்ச்சியோடு தமிழினமே எழுக!
வேங்கையெனச் சிறுத்தையென வெகுண்டெழுக! எழுக!

எந்தை பெரியா ருரையைப் பாவேந்தர் பாட்டை
இணையற்ற பாவலேரேற் றின்றமிழ்நற் றொண்டைச்
சிந்தையிலே தேக்கியின வுணர்ச்சி மிகப் பெற்றே
சீறிவரி மாவெனவே தமிழினமே எழுக!
முந்தை நம் பெருமையெலாம் பெற்றிடவே எழுக!
மூண்டெரியும் தீயாக ஆரியத்தை எரித்தே
அந்தநாள் புகழோடு புதுப்புகழும் சேர்ந்தே
ஆண்டிடவே விடுதலையைப் பெறவேண்டும் எழுக!

ஆண்டிருந்த என்னினமே அடிமைநிலை சிறப்பா?
அதைப் போக்கித் தன்னுரிமை அடைந்திடுதல் சிறப்பா
சாண்வயிறு வாளர்ப்பதுதான் தமிழர்குறிக் கோளா?
தன்மான வாழ்வன்றோ தமிழனத்தின் வாழ்வு
மாண்டிட்ட உன் பெருமை மீட்டிடுதல் நன்றா?
மாற்றானின் வால்பிடித்து வாழ்ந்திடுதல் நன்றா?
பூண்டிடுக போர்க்கோலம் வண்டமிழ இனமே!
புறப்படுக! புறப்படுக விடுதலையைப் பெறவே!

பெறவேண்டும் விடுதலையித் தலைமுறையிறு லேதான்
பின்தள்ளி வைத்திட்டால் இனமழிவ துறுதி
வெறும் பேச்சு அல்லவிது உண்மைமிக வுண்மை
மென்றமிழ நம்மினத்தின் அண்மைநிலை இஃது
குறும்பரந்த மாற்றாரின் கொட்டமெலாம் அடக்க்க்
குருதியினைச் சூடேற்றிக் கொந்தளித்தே எழுக!
நறுந்தமிழ நல்லினமே! பொங்கியெழுந் திடுக!
நம்நாட்டை நமதாக்கும் வடுதலையைப் பெறவே.

இழிவொழிக்கத் தாழ்வொழிக்க ஏய்ப்பொழிக்கச் சுரண்டல்
என்பனவெல் லாமொழிக்க அழிவுநிலை தவிர்க்க
அழிமாட்டத் தன்னலத்தை அடியோடு சாய்க்க
அல்லல்களைத் தொல்லைகளை வேரோடு மாய்க்க,
குழிதோண்டித் தான்புதைக்க ஆரியத்தை மூடக்
கொள்கைகளைக் கொன்றொழிக்க மெய்யறிவை நாட்ட
இழந்துவிட்ட நம் பெருமை நம்முரிமை மீட்க
ஏற்றவழி விடுதலைதான் வேறில்லை எழுக!



# தமிழ்க்களம் நோக்கி ...

**தெ**ன்மொழி ஓர் இதழன்று - ஓர் இயக்கம்! மொழி இன, நாட்டடிப்படையில் தமிழும், தமிழனும், தமிழ்நாடும் அடிமைச் சகதியினின்று மீள வேண்டுவதை நோக்கமாகக் கொண்டதே அவ்வியக்கம்.

அவ் வியக்கத்தின், மூச்சுயிர்ப்பினராகவே நம் அருந்தமிழ்ப் பாவலரேறு ஐயா அவர்கள் வாழ்ந்தார்கள்.

தாம் வேற்றுடலம் மாற்றி வந்து செயலாற்ற வேண்டிய அளவில் விரிந்தும், ஆழ்ந்தும் இக் கொள்கைப் பணியுடையதை ஐயா அவர்கள் நெஞ்சு நெகிழ்ந்து எடுத்துரைத்து வந்தார்கள்.

அவர்களின் உயிர்க் கொள்கையை மேற்கொண்டு இடைவிடாது தொடர்ந்து செயலாற்றுவதே நம் அனைவரின் வாழ்க்கை நோக்கமாகவும் இருந்திடல் வேண்டும்.

அந் நோக்கம் செயற்பாட்டிற்கான வினைக்களமே - தமிழ்க்களமாகும்.

அவ்வகைத் தேவைக்குரிய பாவலரேறு தமிழ்க்கள - அமைப்பு முயற்சி மேற்கொண்டு இரண்டாண்டுகள் ஆகின்றன.

தனிப்பட எந்த ஒரு கட்சியிடமிருந்தோ, தனி நிலையினரிடமிருந்தோ பொருள் பெற்று எளிதே அமைத்துவிடுகிற நிலைகூடாது என்றும், தமிழர் அனைவரின் நல்கையிலுமேதாம் - தமிழ்க்களம் அமைக்கப்பெற வேண்டுமென்றுமான எண்ணத்தில் - அதற்கான முயற்சி மேற்கொள்ளப் பெற்றிருக்கிறது.

ஆனால் அதற்கென இதுவரை திரண்டிருக்கிற தொகை, அதன் தேவையில் மிகமிகக் குறைவானதே.

காலத்தே தமிழ்க்களப் பணியைச் செய்வதும், தொடர்ந்து தமிழ்க்களம் மேற்கொள்ள இருக்கும் பணிகளில் தோய்வதுமே நம்மின் கடமை.

அவ்வகையில் இன்றைக்கு நம்மின் முதற் பெருங்கடமையைச் செயலாற்ற முனைவோம்.

கடந்த **15.4.96**-க்குப் பிறகு **25.6.96**-வரை நன்றியுடன் பெறப்பட்ட தமிழ்க்கள அமைப்புக்கான தொகைகள்.

**பட்டியல் எண்:2**

* பட்டியல் 1-இன்று வந்த வரவுத் தொகை மொத்தம்: 34825.00
(தென்மொழி சுவடி 28, ஓலை4,
1. ஈரோடை திரு.அரசமாணிக்கனார் அவர்கள் வழி: 3000.00

2. நெல்லிக்குப்பம், மருத்துவர் சுந்தர் அவர்கள் வழி: 1000.00
3. பூந்தோட்டம், விசயக்குமார் அவர்கள் வழி: 4000.00
4. நிலக்கோட்டை, தவையைநம்பி அவர்கள் வழி: 1829.00
5. உசெல்லூர், சீத்தலைச் சாத்தனார் அவர்கள் வழி: 3000.00
6. கரடிப்பட்டி, கண்ணன் அவர்கள் வழி: 2000.00
7. தென்மொழி அச்சகத்திற்கு நேரடியாகவும் பணவிடை வழியாகவும் காசோலை வழியாகவும் பெறப்பெற்ற தொகை இரண்டாம் முறையாக வரவு: 18,610.00

**விளக்கம்:**

| | |
|---|---|
| த.அன்பழகன் - அரங்கசமுத்திரம் - | 100.00 |
| சூரிய மூர்த்தி - ஒசூர் - | 1000.00 |
| கெ.பி. இராவணன் - கோலாலம்பூர் - | 400.00 |
| வே.பாண்டியராசன் - தூத்துக்குடி - | 25.00 |
| தமிழன்பனார் - சிங்கப்பூர் - | 5000.00 |
| சரவணவேல் - சென்னை - | 75.00 |
| அன்பு - மும்பாய் - | 100.00 |
| பெருமாள், மும்பாய் - | 100.00 |
| மு.பச்சையப்பன் - புதுச்சேரி - | 2000.00 |
| கி.ஆறுமுகம் - தாராபுரம் - | 2000.00 |
| இராசகோபாலன் - கடலூர் - | 1000.00 |
| இரா. சடகோபன் - சென்னை - | 1000.00 |
| சரவணத்தமிழன் - கன்னிகைப்பேர் - | 100.00 |
| தமிழ்மாறன் - கோலாலம்பூர் - | 60.00 |
| அ.மதன்ராசன் - மும்பாய் - | 250.00 |
| செந்தாழை ஆறுச்சாமி - அரிசோனா - | 6800.00 |

8. துறையூர் - தமிழ்நெஞ்சன் அவர்கள் வழி : 1000.00
9. நக்கசேலம் - தமிழரங்கன் அவர்கள் வழி : 880.00
10. சென்னை - சிற்றரசு அவர்கள் வழி : 150.00

35469.00

பட்டியல் எண் :1-இன் வரவு: 34825.00
25.6.96 - வரை - மொத்தவரவு : 70294.00

**பாவலரேறு தமிழ்க்களத்திற்கு**
**உங்களின் தொகையைச் செலுத்திவிட்டீர்களா ?**

# சென்னை, கொடைக்கானல் வெடிகுண்டு வழக்கில் தண்டனை அளிக்கப்பட்டோர் மேன்முறையீடு!

## பொழிலன், இளங்கோ உள்ளிட்ட அறுவர் பிணையலில்விடுதலை!

## முகிலன், அறிவழகன் பிணைவிடுதலை கோரிக்கை!

**சென்**னை-கிண்டியில் நேரு சிலை, கொடைக்கானல் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் ஆகிய இடங்களில் வெடிகுண்டு வைத்ததாகவும், பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தி இழப்பு ஏற்படுத்தியதாகவும் தொடரப்பட்ட வழக்கில் வாழ்நாள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்ட நால்வரில் திரு. பொழிலன் திரு.இளங்கோ ஆகிய இருவரும், தொகைத் தண்டமும் இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்ட நால்வரும் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

கடந்த ஒன்பதாண்டுகளுக்கு முன்பு, சென்னை-கிண்டியிலுள்ள நேருசிலையை யொட்டியும், கொடைக்கானல் தொலைக்காட்சி அஞ்சல் நிலையச் சுற்றுச் சுவரிலும் தமிழ்நாடு விடுதலைப்படை என்னும் பெயரில் வெடிகுண்டு வைத்ததாகவும், சில கற்களையும் கண்ணாடிகளையும் உடைத்துச் சேதப்படுத்தி அரசின் கணக்குப்படி உரு 3806/- மற்றும் 2745/- இழப்பு ஏற்படுத்தியதாகவும் திண்டுக்கல் அமர்வு வழக்கு மன்றத்தில் காவல்துறையினர் வழக்குத் தொடந்தனர்.

அவ் வழக்கில் கடந்த கும்பம் 6-ஆம் பக்கல் (17-2-97) அன்று நடுவர் சர்தார் சக்கரியா உசேன் என்பவர் திருவாளர்கள் பொழிலன், முகிலன், இளங்கோ, அறிவழகன் ஆகிய நால்வருக்கும் வாழ்நாள் சிறைத்தண்டனையும், திருவாளர்கள் குணத்தொகையன், ஈகவரசன், தெய்வமணி ஆகிய மூவர்க்கு உரு.500 தொகைத் தண்டமும், மூவாண்டுக் கடுங்காவல் தண்டனையும் அளித்தும், திரு. குண்டலகேசிக்கு உரு.500 தொகைத் தண்டமும் ஓராண்டுக் கடுங்காவல் தணடனையும் அளித்தும் தீர்ப்பு வழங்கினார்.

தண்டிக்கப்பட்டோர் அனைவரும் இத்தீர்ப்பை எதிர்த்துச் சென்னை உயர் வழக்குமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளனர்.

வாழ்நாள் தண்டனைச் சிறையாளிகளான திருவாளர்கள் பொழிலன், இளங்கோ ஆகிய இருவருக்கும் உரு.10,000/- மேனி இருவர்தம் சொத்துப் பிணையிலும், அயலூர் செல்லக்கூடாது; காவல் நிலையத்தில்ஒவ்வொரு நாளும் மூவேளை கையொப்பமிடவேண்டும் என்னும் வரையறையிலும் சிறையினின்றும் கடந்த 27.5.97- அன்று அறமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர். திருவாளர்கள் முகிலன், அறிவழகன் ஆகிய இருவரும் அற மன்றத்தில் பிணையல் விடுவிப்புக் கோரியுள்ளனர்.

இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனைச் சிறையாளிகளான திருவாளர்கள் குணத்தொகையன், ஈகவரசன், தெய்வமணி ஆகியோரும் திரு குண்டலகேசியும் தலைக்கு உரு.2,000/- மேனி இருவர்தம் சொத்துப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் திரு.பொழிலனுக்காகவும் திருவாளர்கள் குணத்தொகையன், ஈகவரசன், தெய்வமணி மற்றும் குண்டலகேசி ஆகியோருக்காகவும் வழக்கறிஞர் கலைமணி அவர்கள் சிறப்புற வழக்காடினார்கள்.

# தமிழீழத்திற்கான ஆதரவும் தமிழகத் தேர்தல் கட்சிகளும்

ஐயா,

1980-வாக்கில் தமிழீத்திற்கான ஆதரவு தமிழகத்தில் மிகுதியாக இருந்தது போன்று இப்போது இல்லை. தமிழீழம் பற்றியதான அக்கறையும், அங்கும் தாக்குறும் போதெல்லாம் துணுக்குற்று எழுந்து போராடும் தமிழக மக்களின் உணர்வுகள் எல்லாம் இன்றைக்குப் பெருமளவில் அடக்கப்பட்டிருக்கின்றன. தமிழீழ ஆதரவு பற்றிப் பேசுவது ஏதோ வேண்டாத செய்தி போல எண்ணப்படுகிறது.

இதற்கான காரணங்கள் பலவாக இருந்தாலும் - அவற்றில் தமிழீழத்திற்கான ஆதரவுகளில் தமிழகத் தேர்தல் கட்சிகளின் சூழ்ச்சியான நடைமுறைகளே முதன்மையானவை என்று குறிப்பிடலாம்.

அந்த அளவு அவைதம் தேர்தல் சாய்காலுக்காகவும், தம் ஆட்சி உறுதிப்பீட்டுக்காகவும் தமிழக மக்களின் உணர்வுகளைச் சூம்ப வைத்துவிட்டன.

இத்தகைய போக்குகளில் எந்தக்கட்சியும் ஒன்றுக்கு ஒன்று சளைத்ததன்று.

தமக்குத் தேவைப்படுகிறபோது தொண்டை கிழிய ஈழத்தைப் பற்றிப் பேசுவதும், அதனால் தமக்குப் பயனில்லை என்றாகிற போது அதை முழுமையாய் எதிர்ப்பதும் இவற்றின் வெளிப்படையான ஊசலாட்டங்கள்.

கடந்த மாதம் 6-ஆம் நாள் நடத்தப்பட்ட முழு அடைப்பை இதற்குப் பெரும் சான்றாகக் கூறலாம்.

இதற்குமுன் தமிழீழ மக்களின் பாதுகாப்பிற்கென நடத்தப்பட்ட முழு அடைப்புகளில் ஆளும் கட்சிகளும் கலந்துகொண்டு தமிழகத்தின் ஒட்டு மொத்தக் குரலை உயர்த்திக்காட்டின.

ஆனால் கடந்த 6-ஆம் பக்கல் நடத்த அறிவிக்கப்பட்ட முழு அடைப்பில் ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்ள மறுத்துவிட்டது. அதற்கு அது பல புறக்காரணங்களை, எடுத்துச் சொன்னாலும் உள்ளடக்கத்தில் ஈழத்தமிழரின் வாழ்வுரிமை தம் ஆட்சிக்குச் சோறு போடாது என்பதையே அடிப்படையாகவைத்து மறுத்துவிட்டது.

கடந்த சூழல்களில் - ஈழத்தமிழர்க்காகத் தம் ஆட்சியை இழக்கவும் அணியம் - என்றெல்லாம் தி.மு.க. தலைவர் பேசியது கூட மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான அளவில் அந்த இழப்பு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தானே தவிர, ஆட்சி இழந்து

விடுதலைக்குத் துணை செய்ய வருகிற வேட்கையில் அல்ல.

எனவேதான், அண்மையில் தமிழீழத்தில் சிங்கள வெறிப்படை ஈழத்தின் வடபகுதி ஊர்களைத் துடைத்தெறிந்து மக்களைக் கொன்று குவிக்கிற போதுகூட அங்கிருந்து ஏதிலியர் எவரும் தமிழகம் வந்து தமக்குத் தொல்லை கொடுத்துவிடக்கூடாது என்று தி.மு.க. தலைமை எண்ணுகிறதே அல்லாமல் ஈழத்தமிழரின் பாதுகாப்புக் குறித்து அது திரும்பிப் பார்க்கக்கூட மறுக்கிறது.

சிங்கள அரசு - புலிகள் இயக்கத்தின்மீது பழியைப் போட்டு தி.மு.க. தலைவருக்குத் தொல்லைகொடுக்கத் திட்டமிட்டிருப்பதை உளவுத்துறை அறிந்து செய்தியை தி.மு.க. தலைவருக்குக் கூறியிருந்தும், அவர் அது குறித்தெல்லாம் கவலையுறாமலும், சிங்களக் காடையரசை எதிர்க்காமல் இருப்பதும் வியப்பானதே.

கடந்த காலக் கட்டங்களில் வடக்கே தமக்குத் துணையான ஆட்சி இல்லை என்பதாகக் கூறி ஈழ விடுதலைக்கு உதவ மறுத்தவர்கள் - இன்றைக்கு வடக்கே நிலையான ஆட்சி இல்லை என்று கூறி மழுப்புகிற போக்கிலேயே நிலைத்திருக்கிறார்கள்.

தி.மு.க. அரசியலுக்குள் நுழைந்தது தில்லி ஆட்சியாளர்களின் துணையைத் தேடி வடக்கு வாழ்கிறது தெற்குத் தேய்கிறது. என்று தில்லியை எதிர்த்து அரசியல் செலவைத் தொடங்கியவர்கள், இன்றைக்குத் தில்லியின் ஆட்சிச் சூழலிலிருந்து தம் அரசியல் நடைமுறையை மேம்படுத்திக்கொள்வது எவ்வளவு இழிவானது.

தி.மு.கழகம் இந்த அளவில் 6-ஆம் பக்கல் முழு அடைப்பை மறுத்துவிட்டது தவறு என்றால் அ.தி.மு.க-வும், ம.தி.மு.க.வும் முழு அடைப்பில் கலந்துகொண்டது ஏதோ ஈழத்தமிழர்க்கான ஆதரவு உணர்வில் என்று தவறுதலாக எண்ணிவிட முடியாது.

ஈழத்தமிழர்க்கான உரிமைகளை, அவர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புகிற முயற்சிகளைச் சிறிதும் ஈழத்தமிழர் பற்றிய அக்கறையில்லாமல் நசுக்கி வெறியாட்சி நடத்திய அ.தி.மு.க. தான் இன்றைக்கு ஈழத்தமிழர்க்கு ஆதரவாக முழு அடைப்பில் கலந்து கொண்டதாக அறிவித்தது.

முழுமையாகத் தன் வெறியாட்சியால் புறக்கணிக்கப்பட்டு மக்களால் தூக்கி எறியப்பட்ட அ.தி.மு.க இன்றைக்கு மீண்டும் அரசியல் களத்துக்குள் நுழைகிற வழியாக இதை எடுத்துக்கொண்டதே அல்லாமல் வேறில்லை.

தி.மு.க.வில் இருந்தவரை தொண்டைவறள ஈழத்தமிழர்க்கு உயிர்க் கொடுப்பதாய்க் கத்தித் தீர்த்த ம.தி.மு.க. தலைவர்கள் இன்றைக்கு அ.தி.மு.க. மகுடிக்கும் அடங்கும் பாம்புகளாய்க் கிடக்கின்றனர்.

நடைமுறையில் பல செய்திகளில் சிலசில சறுக்கல்களைச்

செய்திருந்ததோடு இன்றைக்குத் தன் கட்சி வளர்ச்சிக்காகவேனும் ஈழத்தமிழர் சிக்கலில் கூடுதலாக அக்கறை கொண்டியங்குவது பா.ம.க. வாக இருக்கிறது.

மும்பைத் தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிவசேனையும், கருநாடகத் தமிழரை விரட்டி அடிக்கும் மதவெறிப் பா.ச.க.வும் ஈழத்தமிழருக்கு விடும் நீலிக்கண்ணீரின் உட்பொருள்களை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

'எது நேரம் எந்தமிழர் வரலாற்றை இருட்டிக்க என்றே பார்ப்பான் அது நேரம் பார்த்திருப்பதாக' நம் அருந்தமிழ்ப் பாவலரேறு ஐயா அவர்களின் எச்சரிப்புகளை இங்கு ஆழ்ந்து எண்ணிடல் வேண்டும்.

ஆக, இத்தகைய சூழ்நிலை வயப்பட்ட கட்சிகளை நம்பி மக்களின் அலைமோதலையே மறுக்கக் கடமைப்பட்ட இயக்கங்கள் மீண்டும் மீண்டும் அவர்களை நம்பியும், அவர்களில் சிலரை இணைப்பதற்காகவும், சிலரோடு இணைந்து கொள்வதற்காகவும் ஈழத்தமிழர்க்கு ஆதரவாய்ப் போராட எழுவது ஈழத்தமிழர்க்கான ஆதரவை மேலும் பின்னுக்கிழுத்துக் கொண்டு போகவே செய்யும்.

என்பதுவாக்கில் ஈழத்தமிழர்க்கு ஆதரவாக இயக்கங்கள் கட்டிய கூட்டமைப்புச் செயல்களுக்குப் பின்னால் தேர்தல் அரசியல் கட்சிகள் நொண்டிஅடித்துக் கொண்டு ஓடிவந்தன.

சிங்கள அரசுமட்டும் அன்று, இந்திய அரசும் தமிழகத்திற்கென அஞ்சிக் கொண்டு அன்றைக்கு ஈழத்தமிழர் சிக்கலில் கவனம் செலுத்த வேண்டிய சூழல் இருந்தது.

ஆனால் இன்றைக்கோ நொண்டிஅடித்து வந்த கட்சிகள் முன்னால் ஓடித் தாமே கடிவாளத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டும் இயக்கங்களில் சிலவற்றைச் செயல்பட விடாமலும், சிலவற்றைக் காயடித்துத் தன்னளவில் வைத்துக்கொள்வதுமான நடைமுறையில் இயங்கத் தொடங்கிவிட்டன.

தமிழீழத் தமிழர் ஆதரவு இந்த நிலையில் அவலப்பட்டு நியகியது, இந்த நிலைகளைச் சரிவர விளங்கிக் கொண்டு, "இதோ நான் ஒருவன் இங்கு இருக்கிறேன்- எனைச் சிறை செய்யினும் செய்க. ஈழத்தமிழரை ஆதரிக்கின்றேன்-என் தலை கொய்யினும் கொய்க!" என்று பாவலரேறு ஐயா அவர்கள் கூறிய உளத்துணிவை நெஞ்சில் ஏந்திக் கொள்ளும் இயக்கங்கள் எந்தத் தேர்தல் கட்சிகளுக்காகவும் இல்லாமல் தாங்களே தீர்மானிக்கிற வகையில் ஆதரவுச் செயல்பாடுகளைத் தொடங்கினால் அல்லாமல் ஈழத்தமிழர்க்கான ஆதரவு சரியான திசைவழிச் செல்ல இயலாது என்பதைக் கூறவேண்டுவது கட்டாயமாகிறது.

—பெருவழுதி சென்னை-4

# நமக்கு வந்த மடல்கள்.

ஐ, 1620 நாளும் நற்றமிழ் நலம் பேணிவரும் நல்லாசிரியர்களே, நனிவணக்கம். தி.பி.2028 விடை மாதத் தென்மொழி இதழ் வரப் பெற்றேன். ஆடவை என்ற சொல்லையே பயன் படுத்தியுள்ளீர்கள். மொழி என்பது ஒரு குமுகாயக் கலை. அதை அனைவரும் போற்றிப் பின்பற்றிப் பரப்பினால் மட்டுமே வெற்றிபெற இயலும்.

இரட்டை, ஆடவை இரண்டையும் பயன்படுத்தலாம் என்று பாவலரேறு ஐயா கூறினார். இரண்டில் எது மிகவும் சரி? எதைப் பின்பற்ற வேண்டும் என்று தமிழ்க்கடல் மதுரை இளங்குமரனார், முனைவர் இரா.இளவரசு, சொல்வாய்வு அறிஞர் அருளி, புலவர் கோ.திநா.அறிவுஒளி, புலவர் சுதமிழமல்லன் முதலிய பல தமிழ் அறிஞர் களையும் கேட்டேன். அவர்கள் அனைவரும் இரட்டை என்பதையே பின்பற்றிப் பரப்ப வேண்டும். என்றார்கள். புகழ்ந்தவை போற்றின் செயல்வேண்டும் செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். என்பது வையம் புகழ் வள்ளுவர் வழங்கும் வழி. அதன்படி இரட்டை என்பதையே பின்பற்றிப் பரப்பி வருகிறேன், என் ஏந்து வாய்ப்புக்கு ஏற்ப. தங்களுக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் தமிழர் ஒற்றுமை எண்ணி விட்டுக்கொடுங்கள் என்றும் பல முறை மடல் மூலம் கோரினேன். வெற்றி இல்லை.

19.5.97-ஆம் நாள் செங்கற்பட்டில் நடந்த திருமணத்துக்கு நண்பர் பூங்குன்றன் வந்தார். அவரிடமும் இது பற்றி எடுத்துக் கூறினேன். தென்மொழி ஆடவை என்கிறது. நீங்கள் இரட்டை என்கிறீர்களே, எது சரி; எதைப் பின்பற்றுவது என்று வினவுபவர்களுக்கு விடை அளிப்பது சிக்கலாகிறது. நம் ஒற்றுமையின்மை ஆரியம் எளிமையாக வெற்றிபெற ஏதுவாகிறது! ஒரே குரலில் ஒலித்தல், ஒன்றுபட்டுச் செயல்படுதல் இல்லாமையால் நம் கோரிக்கைகள் வெற்றி வாய்ப்பை இழக்கின்றன. எனவே, அடுத்து வரும் தென்மொழி இதழில் இரட்டை என்று அச்சிடக்கோருகிறேன்.

இறுதியாக ஓர் அன்பு வேண்டுகோள். எழுதிய எனது பெயரை மறந்து தமிழையே நினைந்து ஆவன செய்யக் கோருகிறேன்.நனி நன்றி!

தங்கள் அன்பனாக- வி. வேம்பையன் மறைமலைநகர்

குறிப்பு :

இரட்டை ஆடவை என்பன பற்றி முன்னரே தென்மொழியில் (சுவடி;28;ஓலை:8) விளக்கம் எழுதப்பட்டுள்ளது. அன்பிற்குரிய திருவாளர் வேம்பையன் அவர்கள் அட்டை வழித் தமிழ்மாதப் பெயர்களைப் பரப்பத் தொடங்குதற்குப் பல்லாண்டுகட்கு முன்னரே, மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் ஏட்டையொட்டித் தென்மொழியில் இரட்டை கைவிடப்பட்டு,

ஆடவை ஆட்சி பெற்றுவிட்டது. தமிழ்த் திருப்பாவாணர் அவர்களும் தாம் ஆடவையையே கடைப்பிடித்து வந்தார்கள். (பாவாணர் கடிதங்கள்: பக்: 181) முன்னதிற் பின்னதே வலிவுடைத்து என்பது தருக்கநெறி.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களிலும் தென்மொழி நாட்காட்டி யுள்ளிட்ட பல்வேறு வெளியீடுகளிலும் தொடர்ந்து ஆடவையே இடம்பெற்றுக்கொண்டுள்ளது. மற்றும் பல்வேறு இதழ்களாலும் வேலா முதலான வெளியீடுகளாலும் ஆடவையே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறோ பழைய இரட்டையைப் பற்றிக்கொண்ட திரு.வேம்பையன் அவர்கள் கொண்டது விடாக் கொள்கையராய், மேற்கூறிய அனைத்திற்கும் மாறாகவும், கரணியம் ஏதும் காட்டி விளக்காமலும், தமிழறிஞர்கள் சிலர் பெயர்களைத் தொடர்புபடுத்தியும் எழுதியிருப்பதோடு தென்மொழியின் போக்கை மாற்றிக்கொள்ளும்படி வேண்டுவதும், பிறவும் மிகையானவை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். - இறை

*0:1621* மதிப்புமிக்க அம்மா, வணக்கம்,

இப்போது எங்குப் பார்த்தாலும் சாதிச்சண்டைகள் மும்முரமாக நடந்து மக்களுடைய மனநிலையை மிகவும் கெடுத்துக் கொண்டிருக்கின்றன. யாவரும் இவற்றை அறிந்து துயரப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சாதி வேறுபாட்டால் ஏற்படும் வெறி உணர்வை எப்படி நீக்கலாமென எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் கட்சிகளும் மற்றும குமுகத்தின் மீது பற்றுள்ளம் கொண்டவர்களும் சாதியை எப்படி ஒழிக்கலாமெனக் கடுமையாகச் சிந்தனை செய்வதை அறியமுடிகிறது.

பாவலரேறு ஐயா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே சாதியை ஒழிக்க வழிகாணும் வகையில் ஒரு நூலையும் வெளியிட்டு வழிவகைகளைக் கூறியுள்ளார். அக்கருத்துகளை அப்போது யாரும் கண்டுகொள்ளவில்லை. அக்கருத்துகள் சிறந்தவை என்பதையும் உணராமல் இருந்திருக்கலாம். இப்போது ஐயா கருத்துக்களை இயக்கங்கள் பேசி வருகின்றன. சாதியின் பெயரால் சாய்கால் பெறுவதைத் தவிர்க்கவும் அதற்கு மாற்றுவழிகளையும் ஐயா அந்நூலில் திறம்படக் கூறியியுள்ளார்கள். ஐயா கூறிய கருத்துகளைப் பரப்பினால் நாடு நலம் பெறும். ஐயாவின் சாதி ஒழிப்புக் கருத்துகளை மக்களிடம் பரப்ப முயலும்படி வேண்டுகிறேன்.

அன்பன், **அதியமான்**, தாழையூற்று

*0:1622* மதிப்பிற்குரியீர், வணக்கம்!,

திருப்பூரில் நடைபெற இருந்த குழந்தைத் தொழிலாளர் இலக்கியப் பாசறையில் கலந்துகொள்ள இசைவுதெரிவித்திருந்தேன். ஆகுவே பவானிக்கு வர இயலவில்லை. அருள் கூர்ந்து பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். பெருஞ்சித்திரனார் அவர்களின் பால் எனக்குப் பெரிதும் மதிப்பு உண்டு. விழா சிறப்பாக நடைபெற்றிருக்கும் என்று நம்புகிறேன். தங்கள் முயற்சிக்கு என் நல்வாழ்த்துகள்.

தங்கள் - **ஞானி**, கோவை

0.1623 வணக்கம், தென்மொழி பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர்-உள்ளபடியே பல வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுப்படுத்துகின்றது. இரண்டு ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருந்த ஒரு பாடல், இந்த மலரில் வந்திருக்கிறது. மனுநூல் எரிப்புச் செய்து கோவைச் சிறையில் இருந்தபோது 25.5.81-ஆம் நாள் காலையில் ஐயா எழுதிய 'என்மனைவி தாமரையாள்' என்னும் பாடல்தான் அது.

என்றும் அன்புடன்.
பாவை நடவரசன், ஈரோடை

0:1624 அன்புடையீர், பாவலரேறு அவர்களின் இரண்டாம் ஆண்டுத் தென்மொழி நினைவுமலர் கண்டேன். ஐயா அவர்களின் நினைவைப் போற்றும் உண்மைத் தொண்டர்களின் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. மகிழ்ச்சி!எனினும் தோழர் கி.வே.பொன்னையனின் கட்டுரையில் சில நெருடல்கள் உள்ளன.

"என்னுடன் நீங்கள் இறுதிவரை இருக்க வேண்டும். எனக்கு ஏதாவது என்றால் தாங்களும், தங்கள் இயக்கத்தவரும் அருகிலிருந்து செய்யவேணடும்'' என்று ஐயா அவர்கள் கூறியதாகத் திரு.பொன்னையன் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட பகுதியில் வரிகளுக்கிடையில் படித்துப் பொருள் கொள்ள வேண்டிய செய்திகள் உள்ளன.

ஐயா அவர்கள் எதற்கும், எவரிடமும் உதவி நாடாதவர். அவரை நாடிவந்த பொருள், பொன், பதவிகளைச் சீந்தாதவர். எமை நத்துவாய் என எதிரிகள் மட்டுமன்று, எவராயிருந்தாலும் கோடி இட்டழைத்தாலும் தொடாத பண்பினர். அத்தகைய தன்மானச் அரிமா; இவரை (கி.வே.பொ.) தம்முடன் இறுதிவரை இருக்க வேண்டும் என்றும், தமக்கு அருகிருந்து செய்ய வேண்டும் என்றும் கூறியதாகக் கூறுவது பாவலரேறு அவர்களுக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லாததோடன்றித் திருபொன்னையன் தம்மை முதன்மைப் படுத்திக் கொள்ள முயல்வதின் சிறுமையான வெளிப்பாடாக உள்ளது.

- ஆடல், ஈரோடை

0:1625வணக்கம்! தென்மொழிபாவலரேறு நினைவுமலர்(சுவடி-29,ஓலை-6) காணும் வாய்ப்புக்கிட்டியது. பல்வேறு அறிஞர்களின் கருத்துப் பெட்டகமாய்த் திகழ்கிறது மலர்.

திரு.கி.வே.பொன்னையன் என்பவர் தம் கட்டுரையில் சில செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். பாவலரேறு அவர்கள் த.நா.மா.இலெ கட்சியோடு நெருக்கம் கொண்டிருக்கலாம். அதற்காக அக்கட்சியின் பொதுச்செயலாளர் என்று கூறப்படுகிற திருகார்முகில் என்பவர்

தமக்குப் பொதுச்செயலாளர் என்று கூறியதாகக் குறிப்பிடுவது ஐயப்பாடுடையது.

பாவலரேறு அவர்கள் எந்தக்கட்சித் தலைமையையும் ஏற்காதவர். ஆனால் கட்டுரை முழுவதும் பாவலரேறு ஏதோ தம்மைப் பொன்னையன் கட்சிக்காரராக மாற்றிக் கொண்டார் என்பது போலப் புனைந்திருக்கிறார்.

ஐயா அவர்களுடன் தொடக்கக் காலத்திருந்தே பழகிய பல்வேறு அறிஞர் பெருமக்கள் இப்போது பலவேறு இயக்கங்களில் உள்ளனர். அவர்கள் யாரையும் ஐயா அவர்கள் எதற்காகவும் அணுகியதில்லை. ஆனால் ஓரிரண்டாண்டுப் பழக்கமேயுள்ள திரு.பொன்னையனிடம் தம்மையும் தம் இயக்கத்தையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் என்று பொருள்படும்படி தம் கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளார். வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியா வண்ணம் ஐயா அவர்களுக்கு உதவியவர்கள் இன்னும் பலர் உளர் (அவ்வுதவிகள் எவையும் ஐயா அவர்கள் கோரிப்பெற்றவையல்ல) அத்தகையோரெல்லாம் தம் நினைவுக் கட்டுரையில் அவை பற்றி ஏதும் குறிப்பிடாது பெருமை காத்துள்ளனர். ஆனால், பொன்னையன் தமது கட்டுரையில் பாவலரேறு தம்மிடம் அவருக்கு உதவிசெய்ய வேண்டும் என்று வேண்டியதாகக் கூறியிருப்பது உண்மைக்குப் புறம்பானது மட்டுமன்று; பாவலரேறு அவர்களின் புகழுக்குக் களங்கமூட்டுவதாகவும் உள்ளது.

அன்புடன், திருமாலரசு, வெங்கமேடு

## செந்தமிழ்க் கிழார் மறைவு



மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் நம்பிக்கைக்குரிய நல்லன்பரும், உலகத் தமிழ்க் கழகத்தின் பொருளாளரும், பாவாணர் நூல் வெளியீடுகளுக்குத் துணைநின்றவரும் துறையூர் அரசினர் மேனிலைப் பள்ளியின் தலைமை யாசிரியராக இருந்து ஓய்வு பெற்றவரும், பாவலரேறு ஐயா அவர்கள்பால் பேரன்பு பூண்டவருமான செங்கை செந்தமிழ்க்கிழார் கடந்த இரு திங்களுக்கு முன் இயற்கை யெய்தினார் என்று அறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவர்தம் குடும்பத்தார்க்கும் அன்பர்களுக்கும் ஆழ்ந்தஇரங்கலைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்

## செய்திகள்

*மலர்விழி - பிரகாசு வாழ்க!*

தென்மொழி யன்பரும் வாழ்நாள் உறுப்பினருமான திருப்பராய்த் துறை திரு.நா. அன்புச்செல்வன் (நடேசன்) அவர்கள் மகள் செல்வி மலர்விழிக்கும், மயிலாடுதுறை திரு. ஐயாறப்பர் தண்டபாணி அவர்கள் மகன் செல்வன் பிரகாசுக்கும் தி.பி.2028 மேழம் 19 அன்று (2.5.97), மயிலாடுதுறை - கூறைநாடு கணேசா திருமணமண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் வாழ்வாங்கு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது!

*எழில்வாணன் - அன்புச்செல்வி மணவிழா*

திருத்தணி வட்டம் நெடும்பரம் சிற்றூர் ஆசிரியர் திரு.செயராமன்-காந்தம்மாள் ஆகியோர் மகன் செல்வன் இரமேசு என்ற எழில்வாணனுக்கும், அரக்கோணம் காமராசர்நகர் திரு.கே.ஏகாம்பரம்- கத்தூரி ஆகியோர் மகள் செல்வி சசிகலா என்ற அன்புச்செல்விக்கும் தி.பி.2028 விடை 26 திங்கள்(9.6.97) அன்று அரக்கோணம் மணிமாளிகை (மணிநாயுடுமகால்) திருமண மண்டபத்தில் திருக்குறள்நெறித் திருமணம் புலவர் இறைக்குருவனார் தலைமையில் நடைபெற்றது. திரு.அன்புவரவேற்புரை யாற்றினார். பாவலர் தென்முகநம்பி மணமக்களை வாழ்த்திப் பேசினார். தமிழ்த்திரு இறைக்குருவனார் மண நிகழ்ச்சியை நடத்திவைத்து வாழ்த்துரை வழங்கினார்.

*ஆவடித் தமிழ்ப் பேரவையில் பாவலரேறுநினைவேந்தல் நிகழ்ச்சி*

சென்னை- ஆவடித் தமிழ்ப் பேரவையின் சார்பில் தி.பி.2028 விடை 30 வெள்ளி (13.6.97) அன்று மாலை 6.30 மணியளவில் கோயில் பதாகை முத்தமிழ் மன்றத்தில் பாவலரேறு இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி திரு.நல்லியம் பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது திரு.அருள்தாசு வரவேற்புரையாற்றினார்.

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனித்தமிழ்த் தொண்டு என்னும் பொருள் பற்றித் திருவாளர்கள் பொன். இராமசாமி, செயவேலன், கி.வ.வேலன், தாயுமானவன், செ.ப.முத்தமிழ்மணி, பொழிலரசு, சதாசிவம், பு.இரவிதாசன், சோ.ம.பொன்னுசாமி, பு.வெங்கடேசன் ஆகியோர் உரையாற்றினர். திரு.வளர்மதி நன்றி நவின்றார்.

*தமிழ்வழிப் பள்ளிகள்(தனியார்) கூட்டமைப்பு*

தமிழ்வழிப் பள்ளிகள்(தனியார்) கூட்டமைப்புக் கூட்டம் கடந்த ஆடவை 8 ஞாயிறு(26-6-97) அன்று, சென்னை-போரூர் உ.வே.சா.தொடக்கப் பள்ளியில் திருவாட்டி இறை.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் இப்போது தமிழ் ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் நடத்தி வரும் தனியார் தமிழ்வழிப் பள்ளிகளுக்கு அரசு நெறிமுறைகளை வற்புறுத் தாமல் இசைவு வழங்க வேண்டும் என்று வேண்டுகோள்விடப்பட்டது. கூட்ட மைப்பின் தொடர்பு முகவரி: இறை பொற்கொடி, தமிழ்வழிப் பள்ளிகள் கூட்டமைப்பு 31, அப்பர்சாமி கோயில்தெரு, மயிலார்ப்பூர்,சென்னை-600 004.



# பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் வாழ்க்கை வரலாறு

**பா**வலரேறு ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை முழுமையாகவும், செம்மை யாகவும் உருவாக்கி வெளியிடுகிற முயற்சியைத் 'தென்மொழி' மேற்கொள்ளவிருக்கிறது.

இது தொடர்பாக அன்பர்களின் ஒத்துழைப் பையும் எதிர்நோக்குகிறோம்.

தமிழ் மொழி- இலக்கியச் சார்பிலும், குடும்ப வாழ்வியல் நிலைகளிலுமான மாநாடுகள், கருத்தரங்குகள், பாவரங்குகள், பொதுக் கூட்டங்கள், திருமணங்கள் உள்ளிட்ட பல்வகை விழாக்கள், முதலானவற்றாலும், போராட்டங்கள், பேரணிகள், தளைப்பாடுகள், சிறைப்பாடுகள் முதலானவற்றாலும் பிறவற்றாலும் ஐயா அவரகளோடு பல்வேறு நிலைகளில் தொடர்புடையவர்கள் தம் தொடர்பு குறித்துக் காலம், இடம் சுட்டித் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.

ஒளிப்படங்கள், கடிதங்கள் இருப்பின் அவற்றையும் (படப்படி) அனுப்பிவைப்பின் நன்று.

தக்கன தேர்ந்து கொள்ளப்படும்.

-ஆசிரியர், 'தென்மொழி'

5,அருணாசலத் தெரு,

சென்னை 600 005.